இதழ் 337
03 மே 2025
17 பக்கங்கள்

# இலக்கு

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

SUBSCRIBE US! youtube.com/@IlakkuWeb2.0
LIKE US! facebook.com/ilakku.ilakku.
FOLLOW US! twitter.com/Ilakku1


ILC தமிழ்

## அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் 15ஆவது நிறைவாண்டுக்கு இலக்கின் தோழமை வாழ்த்துக்கள்



## பெருந்தோட்ட மக்களும் தேர்தல் வாக்குறுதிகளும்

மருதன் ராம்



## இந்திய – பாகிஸ்தான் போர் மூளுமா?

வேல்ஸில் இருந்து அருஸ்



© 2025 இலக்கு இணையம்

# தமிழ் கட்சிகளுக்கு வாக்களியுங்கள்: வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம்

எமது மக்களுக்காக இதுவரை ஏதோ ஒரு வழியில் உழைத்த எமது தமிழ் தேசியப் பரப்பில் இருக்கின்ற கட்சிகளுக்கு வாக்களித்து, அவர்களின் கரங்களுக்கு கொடுப்பது அவசியம் என வடக்கு - கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.




யாழ். ஊடக அமையத்தில் வெள்ளிக்கிழமை(2) யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் குறித்த சங்க பிரதிநிதிகள் ஊடக சந்திப்பொன்றை நடத்தியபோதே சங்கத்தினர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி என்பது எமக்கான அதிகாரங்களைக் கொண்ட ஒரு கட்டமைப்பு. இதை எமது தமிழ் தேசியத்தில் இருக்கும் ஒரு தரப்பினரே ஆளுகை செய்ய வேண்டும்.

தமிழ் தேசியத்தின் வலிமையை இம்முறை நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபை தேர்தலில் தமிழ் மக்கள் காண்பிக்க வேண்டும்.

தென்னிலங்கையின் கட்சிகளின்பிரதிநிதிகள்,அவர்களால்இறக்கப்பட்டுள்ள சுயேச்சைக் குழுக்கள் போன்றவை எம்மை மீண்டும் ஏமாற்றவே முயல்கின்றன. இவர்களை இனியும் நம்ப முடியாது.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# பாரம்பரிய அரசியல் தரப்பினரை தமிழர்கள் புறக்கணித்துள்ளார்கள்: ஜனாதிபதி



தேசிய நல்லிணக்கமில்லாமல் நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய முடியாது என்றும் தமிழ் மக்கள் பாரம்பரியமான அரசியல் தரப்பினரை முழுமையாக புறக்கணித்து தங்களை தெரிவு செய்துள்ளார்கள் என்றும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.


எனவே, தமிழ் மக்களை நாங்கள் புறக்கணிக்க போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார். அவர்களின் அரசியல், மொழி மற்றும் பாரம்பரிய காணி உரிமை, சுதந்திரமாக வாழும் உரிமை மற்றும் அடிப்படை உரிமை என்பவற்றை உறுதிப்படுத்துவோம் என்றும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு - காலி முகத்திடலில் இடம்பெற்ற மே தினக் கூட்டத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களம், குற்றப்புலனாய்வு திணைக்களம் மற்றும் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணைகள் ஆணைக்குழு ஒரு தரப்பினருக்கு மாத்திரமல்ல, அனைவருக்கும் பொதுவானது என்பது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# G.S.P+ சலுகை நீடிக்கப்பட வேண்டும்: முஸ்லீம் காங்கிரஸ் கோரிக்கை



இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் குழு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் உள்ளிட்ட தரப்பினரை சந்தித்து கலந்துரையாடியுள்ளது.

இலங்கை தற்போது இருக்கின்ற நிலையில், ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை நீடிக்கப்பட வேண்டியது கட்டாயம் என்பதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்றுக் கொள்கிறது என்று அவர் இதன் போது குறிப்பிட்டுள்ளார்.

எனினும் சில நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இந்த சலுகை நீடிக்கப்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் நிசாம் காரியப்பர், ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளிடம் கூறியுள்ளார்.

குறிப்பாக பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட்டு புதிய சட்டம் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

புதிய சட்டம் அமுலாக்கப்ப

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# மோதலைத் தவிர்க்குமாறு இந்தியா - பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அறிவுறுத்தல்



இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள போர் பதற்றம் நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றது. சில தினங்களில் இந்தியா தம் மீது தாக்குதல் தொடுக்கவுள்ளதாக பாகிஸ்தான் தனது புலனாய்வுத் தகவல்களை மேற்கோள்காட்டி கடந்த புதன்கிழமை(30) தெரிவித்துள்ள நிலையில் இந்தியா தனது வான் பரப்பை பாகிஸ்தான் விமானங்கள் பறப்பதற்கு தடை செய்துள்ளது.

காஸ்மீர் பகுதியில் கடந்த வாரம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து அங்கு போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது. தனது வான்பரப்பில் இந்திய விமானங்கள் பறப்பதற்கு பாகிஸ்தான் கடந்த வாரம் தடை விதித்ததை தொடர்ந்து தற்போது இந்தியாவின் அறிவிப்பு வெளிவந்துள்ளது.

பாகிஸ்தானின் தாக்குதல்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# இரண்டாவது விமானத்தையும் இழந்தது அமெரிக்கா

ஏமனில் உள்ள குதீஸ் அமைப்பின் மீது அமெரிக்காவின் வான்படையினர் மேற்கொண்டு வரும் தொடர் தாக்குதல்களில் அமெரிக்கா தனது இரண்டாவது எப்-18 சுப்பர் கொனெட்ற் விமானத்தையும் கடந்த வாரம் இழந்துள்ளது.



செங்கடலில் தரித்து நின்று தாக்குதல்களை வழிநடத்தும் அமெரிக்காவின்ஹரிரூமர்விமானந் தாங்கி கப்பல் மீது குதீஸ் அமைப்பினர் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்திய போது அதனை தவிர்க்கும் முகமாக கப்பல் அவசரமாக நகர்த்தப்பட்டபோது ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக எப்-18 விமானம் கடலில் வீழ்ந்து மூழ்கியுள்ளது.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# 3,000 பார ஊர்திகள் இஸ்ரேலினால் தடுத்து வைப்பு

மருந்துப்பொருட்கள், உணவுகள் மற்றும் எரிபொருட்களுடன் சென்ற 3,000 பாரஊர்திகள் காசாவை சென்றடையாது எல்லைகளில் காத்திருப்பதாகவும், அவற்றை இஸ்ரேல் தடை செய்துள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் பாலஸ்தீனத்திற்கான உதவி அமைப்பான UNRWA என்ற அமைப்பு கடந்த வியாழக்கிழமை (1) தெரிவித்துள்ளது.




காசா பகுதியில் ஒரு மில்லியன் சிறுவர்கள் உதவிப் பொருட்களில் தங்கி வாழ்கின்றனர். அவர்களுக்கு உதவிப்பொருட்கள் கிடைக்காதுவிட்டால் அவர்களுக்கு உயிராபத்து ஏற்படும். கடந்த 60 நாட்களாக உணவு, மருந்து மற்றும் எரிபொருட்களை இஸ்ரேல் தடுத்து வருகின்றது. அதனால் காசா பகுதியில் பட்டிச்சாவு ஆபாயமும்,

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# பத்து வருடங்களில் வங்கிகள் காணாமல் போய்விடும்

கிரிப்போகரன்சி எனப்படும் புளொக்செயின் நாணயங்களின் பயன்பாடுகளின் செல்வாக்கு இன்னும் 10 வருடங்களில் வங்கிகளின் செயற்பாட்டை முற்றாக முடக்கிவிடும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்றம்பின் மகன் எரிக் ட்றம்ப் கடந்த புதன்கிழமை(30) தெரிவித்துள்ளார்.



கிறிப்போ நாணயம் மிகவும் இலகுவான பணப்பரிமாற்ற முறையாக மாறி வருகின்றது. தற்போதைய வங்கி முறை மிகவும் மெதுவாகவும், வினைத்திறனற்றும் உள்ளது. வங்கிகளின் செயற்பாடு உடைந்துவிட்டது. அது செலவு மிக்கதாகவும் உள்ளது. எமது வங்கிகள் செல்வந்தர்களுக்கு

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# ஆறுமாத அநுர ஆட்சியில் கூறு போடும் தமிழர் தாயகம்!

**பா.அரியநேத்திரன்**

159, ஆசனங்களை பெற்று ஆட்சிபீடம் ஏறிய தேசிய மக்கள் சக்தி அரசால் ஆச்சரியம் எதுவுமே நடக்கவில்லை பயிலுனர் பாராளுமன்ற உறுப்பினர்களாகவே அவர்களுடைய செயல்பாடுகள் உள்ளது. வடகிழக்கு தமிழர் தாயகத்தை கூறு போடும் செயல்களே தொடர்கின்றன.



ஊழலை ஒழிக்கின்றோம், பொருளாதாரத்தை கட்டி எழுப்புவோம், குற்றவாளிகளை தண்டிப்போம் என வாக்குறுதி கூறி ஆட்சியை பிடித்த அநுர அரசு தற்போது வடகிழக்கில் தமிழ் மக்களின் வாக்குகளை உள்ளூராட்சி சபை தேர்தலில் கவரும் விதமாக தமது போலி வாக்குறுதிகளை வழங்கி தமிழ்தேசிய அரசியலை சிதைக்கும் திட்டத்தில் ஈடுபடுவதை காணமுடிகிறது.

ஈஷ்டர் குண்டு தாக்குதலில் பிரதான சூத்திரதாரியை கடந்த ஏப்ரல் 21, க்கு முன்னர் கைது செய்வதாக ஜனாதிபதி அநுரா கூறினார்.

ஆனால் 2006ல் கிழக்கு பல்கலைக்கழக விவசாயபீட பேராசிரியர் ரவிந்திரநாத்தின் கடத்தல் கொலையின் சந்தேக நபராக பிள்ளையான் கைதுசெய்யப்பட்டார் என்பதே அவரை கைது செய்த பின்னர் பொலிசாரால் வழங்கப்பட்ட தகவல்.

அதன்பின்னர் வேறு எவரையும் இதுவரை கைதுசெய்யாமல் பிள்ளையானை காட்சிப்பொருளாக வைத்து ஈஷ்டர் குண்டு தாக்குதலுக்கான காரண கர்த்தாவாக அவரையே காட்டப்பட்டுவருவதையே காணமுடிகிறது.

ஈஷ்டர் குண்டுத்தாக்குதலின் பிரதான சந்தேக நபர்கள் எவருமே இதுவரை கைதுசெய்யப்படவில்லை, பல ஊழல் வாதிகளாக கடந்த காலங்களில் செயல்பட்டதாக ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பல கோவைகளை அடுக்கிவைத்து பொது மண்டபத்தில் கூட்டம்போட்டு காண்பித்த எந்த ஒரு பெருச்சாளிகளுக்கும் எதிராக இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.

வடகிழக்கிலும் பல ஊழல்களுக்கு துணைபோன பலர் உள்ளனர் என தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் மேடைக்கு மேடை பேசினார்கள். பிள்ளையானை தவிர வேறு எவருமே கைதாகவில்லை. எல்லோருமே சுதந்திரமாக நடமாடுகின்றனர்.

வாய்ச்சொல்லின் வீரர்களாகவும் செயல்களில் மந்தமாகவுமே கடந்த ஆறுமாதங்களாக ஆட்சி தொடர்கிறது.

ஆனால் அரசியல் தீர்வு, அரசியல் யாப்பு திருத்தம், பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கல், அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாக எந்த முன்னேற்றமும் காட்டாமல் வடகிழக்கு தமிழ்மக்களும் தமது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பின்னால் உள்ளனர் என்பதை சர்வதேசத்துக்கு காட்டும் நோக்கில் அவர்களுடைய நடவடிக்கைகளும், தற்போதய உள்ளூராட்சி சபை தேர்தல் பிரசாரங்களும் வடகிழக்கில் தமிழ் பிரதேசங்களில் முகாம் இட்டு பிரசாரங்களை செய்து வருகின்றனர்.

உள்ளூராட்சி சபைத்தேர்தல் முடிவில் அவர்களின் பிரசாரத்திற்கு மயங்கி வடகிழக்கு தமிழர்கள் வாக்களித்து கூடிய ஆசனங்களை, சபைகளை, வட்டாரங்களில் கிடைக்கும் வாக்குத்தொகையை வைத்து வடகிழக்கு தமிழ்மக்களும் தம்மையே ஆதரிக்கின்றனர். அவர்களுக்கு சமஷ்டி தீர்வோ, அரசியல் தீர்வோ

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

**ஆசிரியர் தலையங்கம்**

# இறைமையைப் பேணலுக்கு முக்கியத்துவம் அளித்துள்ள கனடியர்கள்

கனடாவில் தொடர்ச்சியாக நான்காவது முறையாக லிபரல் கட்சி ஆட்சி 2025 பொதுத்தேர்தலிலும் வெற்றி பெற்று பிரதமர் மார்க் கானி தலைமையில் ஆட்சி அமைப்பதற்கு ‘இலக்கு ஆசிரியர் குழுமம்’ இலங்கைத் தீவுக்கு வெளியே அதிக அளவான ஈழத்தமிழர்கள் வாழும் கனடாவின் பிரதமர் என்ற உரிமையுடன் தனது வாழ்த்தைத் தெரிவிப்பதில் பெருமையடைகிறது. இந்த ஆண்டு தொடக்கத்தில் கொன்சர்வேடிவ் கட்சியே லிபரல் கட்சியை விட 20 வீதம் அதிக வாக்குப் பலம் கொண்டு திகழ்வதாகவும் தேர்தல் இடம்பெற்றால் அவர்களே வெல்வார்கள் என்ற எதிர்பார்ப்பும் கருத்துக் கணிப்புக்களாக இருந்தன. ஆனால் முன்னாள் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோவின் திடீர் பதவிவிலகலை அடுத்து மார்ச் மாதத்தில் கனடாவின் லிபரல் கட்சியின் தலைவராகவும் கனடாவின் பிரதமராகவும் பதவியேற்ற மார்க் கானி திடீரென கனடாவின் பொதுத்தேர்தலை அறிவித்து தனது அரசாங்கத்தை உறுதியுள்ள அரசாங்கமாக நிலைப்படுத்தக் கொன்சேர்வேடிவ் கட்சியுடன் பலமான தேர்தல் போட்டியை எதிர் கொண்டார்.

ஆயினும் அமெரிக்க அரசத்தலைவர் ட்ரம்ப் அவர்களின் கனடாவை அமெரிக்காவின் 51 வது மாநிலமாக மாற்றும் நோக்கு கனடியர்களுக்கு தாயகப் பற்றாக எழுச்சியுற்றது. மார்க் கானி கனடாவை அமெரிக்கா தனதாக்க அனுமதிக்காது கனடாவைப் பலப்படுத்த லிபரல் கட்சிக்கு வாக்களியுங்கள். லிபரலின் வெற்றி கனடாவை உடைக்கும் ட்ரம்பின் திட்டத்தை உடைக்கும் என்று விடுத்த வேண்கோளுக்கு பெருமளவு மக்கள் செவிசாய்த்துள்ளதைக் கனடாவின் 2025 ம் ஆண்டுப் பாராளுமன்றத் தேர்தலில் 343 தொகுதிகளில் 169 தொகுதிகளில் எப்ரல் 28 இல் லிபரல் கட்சி வெற்றி பெற்றுள்ளமை உலகுக்குத் தெளிவாக்கியுள்ளது. அளிக்கப்பட்ட வாக்குகளில் 43.7 வீத வாக்குகளை பெற்று 4வது தடவையாக லிபரல் கட்சி பிரதமர் மார்க் கானி தலைமையில் ஆட்சி அமைக்கின்றது. ஆட்சி அமைப்பதற்கான 172 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 3 உறுப்பினர்களே குறைவான நிலையில் அதற்கான சிறிய கூட்டு ஒன்றை மற்றைய கட்சிகளுடனோ அல்லது உறுப்பினர்களுடனோ ஏற்படுத்துவது மூலம் ஆட்சி அமைக்கும் ஆற்றல் உடையதாக லிபரல் கட்சி வெற்றி பெற்றுள்ளது. 2021க்குப் பின்னர் லிபரல் கட்சி 11.1 வீத வாக்காளர் அதிகரிப்பை பெற்றுள்ளமைக்கு ட்ரம்பினை எதிர்ப்பதற்கான மக்களின் தேசப்பற்றே காரணமாகியுள்ளதென ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஒரு நாட்டின் மக்களுடைய தலையாய கடமை தங்கள் நாட்டின் இறைமையைப் பேணுதலே என்கின்ற செய்தியை கனடா மக்கள் உலகுக்கு மிகத்தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர். குறிப்பாக ஈழத்தமிழர் தாயகத்துக்கு வெளியே அதிக அளவாக வாழும் நாடான கனடாவின் மக்களின் தாயகப்பற்றுடனான இந்த உள்ள உறுதி ஒவ்வொரு ஈழத்தமிழருக்கும் ஒரு சிறப்புச் செய்தியை அளிக்கிறது. ஈழத்தமிழர்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாகத் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் தங்களின் வரலாற்றுத் தாயகமான யாழ்ப்பாண அரசினதும் வன்னியரசினதும நிலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் நிலத்தின் இறைமையையும் கனடிய மக்களைப் போன்றே, தங்களை உறுதியின் உறைவிடமாக்கி தாயகத்தின் ஒரு மண்துகள் கூட இழக்கப்படாது பேணவேண்டும் என்பதே அந்தச் செய்தி.

அத்துடன் கனடாவின் பிரதமர் மார்க் கானி அவர்கள் தன்னுடைய தேர்தல் வெற்றிச் செய்தியில் "டொனால்ட் ட்ரம்ப் கனடியர்களான எங்களை உடைக்க முயல்கிறார். அமெரிக்காவினுடையதாக மாற்ற முயல்கிறார். அதனை ஒரு பொழுதும் அனுமதிக்கவே மாட்டோம்" என்றார். இதுதான் மக்களின் இந்தத் தேர்தல் முடிபு என ஆணித்தரமாக எடுத்துரைத்தார். இந்த அரசியல் நேர்மை உறுதி ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் ஒவ்வொருவருக்கும் வர வேண்டும் என்பதே இலக்கின் இவ்வார எண்ணம். இதனை ஈழத்தமிழர்கள் தங்கள் அரசியல்வாதிகளுடன் நேரடியாக இது குறித்த அழுத்தங்களைக் கொடுத்தே அவர்களை இவ்விடயத்தில் முறைமையாகச் செயற்பட வைக்க வேண்டும். ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் "இந்த மண் எங்களின் சொந்த மண்" என வெளிப்படையாகப் பேசமறுப்பதே ‘பிரிவினை கேட்கிறார்கள் ஈழத்தமிழர்கள்’ என்ற அரசியல் பரப்புரை உலகை வலம்வரக் காரணமாக உள்ளது. இதுவே தேசிய பாதுகாப்புக்கு என்ற பெயரில் சிறிலங்கா ஈழத்தமிழரை இனஅழிப்பு செய்ததற்கு அனைத்துலக சட்டத்தில் இருந்து தான் தப்புவதற்கு உபயோகப்படுத்தும் மூலகாரணமாகவும் உள்ளது.

இருபது வருடங்களாக ஒன்ராறியோவின் பாராளுமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து இருந்து வந்த கொன்சர் வேடிவ்கட்சியின் தலைவர் பியர் பொலியவ் (Pierre Poilievre) அவருடைய சொந்தத் தொகுதியிலேயே தோற்கடிக்கப்பட்டிருக்கின்றார். லிபரல் கட்சியைச் சேர்ந்த புருஸ் பான்ஜோய் 51 வீத வாக்குகளைப்பெற்று கடந்த தேர்தலை விட 19 வீத அதிகரிப்பைப்பெற பியர் பொலியவ் கடந்த முறையை விட 6 வீதம் குறைவான வாக்குகளைப் பெற்று 41 வீத வாக்குகளைப் பெற்றுள்ளார். ஆயினும் கொன்சர்வேடிவ் கட்சி 41.3 வீதமான வாக்குகளைப் பெற்று 144 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பலம்பொருந்திய எதிர்க்கட்சியாக மீளவும் வந்துள்ளது. கொன்சர்வேடிவ் கட்சியினர் கடந்த தேர்தல்களை விட அதிக வாக்குகளைப் பெற்றுள்ளதாக கூறி பியர் பொலியவ் தனது கொன்சர்வேடிவ் கட்சித் தலைமைப்பதவியை விட்டு விலக மறுத்துள்ளார். இதனைக் கொன்சர்வேடிவ் கட்சியினர் எவ்வாறு ஏற்கப் போகின்றார்கள் என்பதிலேயே அவரின் எதிர்காலம் தங்கியுள்ளது. இவரே ஈழத்தமிழர்கள் கனடாவுக்கு அரசியல் புகலிடம் தேடிச்சென்ற காலத்தில் அவர்களுக்குப் பலவிதங்களில் சாதகமாக உதவியவர் என்பது வரலாறு. தற்போது ஈழத்தமிர்கள் வாக்குகளைக் கணிசமாகக் கொண்டுள்ள ஒன்ராறியோவில் இவரது தோல்வி ஈழத்தமிழர்கள் லிபரல் கட்சியில் அதிக அக்கறை செலுத்துவதைக் காட்டுகிறது. அதற்கேற்ப லிபரல் கட்சியின் நீதியமைச்சர் ஹரி ஆனந்த சங்கரியும் ஜெனிட்டாநாதன் என்னும் ஈழத்தமிழ் பின்னணி கொண்டவரும் இன்னுமொரு இந்தியத் தமிழ்ப்பெண் வேட்பாளரும் லிபரல்கட்சியில் இம்முறை வெற்றி பெற்றுள்ளனர். இவர்கள் தங்கள் தாயகத்துக்குக் கடமை செய்கின்ற அதேவேளை ஈழத்தமிழர்க்கு என்ன விதத்தில் உதவ வேண்டுமென்பதை கனடிய ஈழத்தமிழர்கள் தெளிவாக தெரியப்படுத்தினாலே இவர்களின் தெரிவு ஈழத்தமிழர்களுக்கு பயன்உடையதாக ஈழத்தமிழர்களுக்கான அனைத்துலக நீதியை பெறக்கூடியதாக அமையும்.

மேலும் பிரஞ்சு மொழி பேசுபவரின் மாநிலமான கியூபெக் தனியான அரசாக அமையவேண்டுமென்ற அரசியல் விருப்புடைய புளக் கியூபேகுவா கட்சி கடந்த தேர்தலை விட 1.3 வீதம் குறைவான வாக்குகளைப் பெற்று மொத்தமாக 6.3 வீதமான வாக்குகளைப் பெற்று 22 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் மூன்றாவது கட்சியாக வந்துள்ளது. அமெரிக்க அதிபரின் கனடாவை அமெரிக்க மாநிலமாக்கும் முயற்சி மாநிலத்தனியாட்சி கோருபவர்களைக் கூட அதனைக் கடந்து தாயகப்பற்றுடன் செயற்பட வைத்துள்ளது என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதுவும் ஈழத்தமிழர்களுக்கு மண்ணின் இறைமையைப் பேணுவதில் அரசியல் வேறுபாடுகள் கடந்த நிலை தேவை என்பதை உணர்த்துகிறது. அதே வேளை சிங்களவர்களுக்குத் தங்களின் தேசத்தின் இறைமையைப் பேணுவதற்கு இருக்கும் ஒருமைப்பாட்டுச் சிந்தனையை வெளிப்படுத்தும் வகையில் பிலிதுருஹெல உறுமய கட்சியின் தலைவரும் முன்னாள் சிறிலங்காப் பாராளுமன்ற உறுப்பினருமாகிய உதய கம்மன்பில இந்தியாவுடன் அநுரகுமார அரசாங்கத்தினர் செய்த ஒப்பந்தங்களில் கருத்திட்டங்களின் செயற்பாட்டுக்காக இலங்கை வரும் இந்தியர்களுக்கு மட்டுமல்ல இந்தத் திட்டங்களில் ஈடுபடும் அரசாங்கத்தின் தேசிய பிரதிநிதிகளுக்கும் எதிராக வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்னும் விதிகள் சிறிலங்காவின் அரசியலமைப்புக்கு எதிரானதாகையால் இவைகள் சட்டவிரோத ஒப்பந்தங்கள் என தெரிவித்துள்ளார். சிங்களத் தலைவர்கள் தங்கள் இறைமையை நிலைப்படுத்துவதில் காட்டும் அக்கறை ஈழத்தமிழ் அரசியல்வாதிகளுக்கு இல்லையென்பதே கவலைக்குரியவொன்றாக உள்ளது.

மேலும் கனடியத் தேர்தலில் நியூடெமோகிரெடிட் கட்சி கடந்த தேர்தலை விட 11.5 வீதமான வாக்குகளைக் குறைவாக 6.3 வாக்குளைப் பெற்று 7 பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுள்ளது. அத்துடன் கிறீன் கட்சியும் கடந்த தேர்தலை விட 1.1 வீதம் குறைவாக வாக்குகளைப் பெற்று மொத்தமாக 1.2 வீத வாக்குகளைப் பெற்று 1 பாராளுமன்ற உறுப்பினரைப் பெற்றுள்ளது. அந்த வகையில் லிபரல் கட்சியின் 169 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகக் கூட்டு மொத்தமாக 174 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். எனவே கனடாவின் இம்முறை அரசாங்கம் சிறுபான்மைப் பலமுள்ள அரசாங்கமாகவே விளங்க இருப்பதால் சட்டவாக்கங்களில் சிக்கல்களை எதிர்நோக்கலாம் என்னும் கருத்துப் பரவலாக உள்ளது. ஆயினும் பிரித்தானிய மத்திய வங்கியின் வரலாற்றில் 300 ஆண்டுகளில் பிரித்தானியக் குடியாக இல்லாத ஒருவர் இயக்குனராகச் செயற்பட்டதென்றால் அது இன்றை கனடாவின் பிரதமர் மார்க் ஆனியே தான். இதனால் கனடிய பிரித்தானிய மத்திய வங்கிகளை மிக இக்கட்டான காலங்களில் இயக்கிய மார்க் ஆனி தனது ஒக்ஸ்வேர்ட்டில் படித்த பொருளாதாரச் சிந்தனைப் பலத்திலும் பிரித்தானியா கனடா யப்பான் நாடுகளில் பெற்ற அனுபவத்தின் அடிப்படையிலும் கனடாவுக்கான பலமான அரசாங்கமாக தனது அரசாங்கத்தை முன்னெடுத்து அமெரிக்க அதிபரின் வர்த்தகப் போரில் வெற்றி பெறுவார் என்பது ஆய்வாளர்கள் கருத்தாக உள்ளது.

**ஆசிரியர்**

# தமிழ்த்தேசியத்துக்கு பலப்பரீட்சையாக அமையும் ஊர் தேர்தல்.!

**பா. அரியநேத்திரன்**

இலங்கையின் உள்ளூராட்சி சபைத் தேர்தலை சுமார் 7 ஆண்டுகளுக்கு பின்னர், எதிர்வரும் மே மாதம் 06ம் தேதி நடை பெறவுள்ளது.

கோவிட் பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி, நிதிப் பற்றாக்குறை உள்ளிட்ட பல் வேறு காரணங்களினால் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்ச்சியாக பிற்போடப்பட்டு வந்திருந்த சூழ்நிலையில், நீண்ட இடைவெளிக்கு பின்னர் தற்போது உள்ளூராட்சி தேர்தலை இடம் பெறுகிறது.



ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் என நான்கு விதமான தேர்தல்கள் இலங்கையில் நடத்தப்படுகின்றன.

இவ்வாறு நடத்தப்படும் நான்கு விதமான தேர்தல்களில் மிகவும் சிக்கலான தேர்தல் முறை யாக இந்த உள்ளூராட்சி சபை தேர்தல் முறைமை காணப்படுகின்றது. அதற்கான காரணம், உள்ளூராட்சி சபைத்தேர்தல் கலப்பு முறையாக காணப்படுவதே ஆகும்..

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக 17,296,330 வாக்காளர்கள் இலங்கை முழுவதும் வாக்களிக்க தகுதிப் பெற்றுள்ளனர்.



கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலை விடவும், உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு 155976 மேலதிக வாக்காளர்கள் வாக்களிக்க தகுதிப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

இலங்கையில் தற்போது 159, பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஆட்சிபீடத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தி அரசின் செல்வாக்கை குறைக்க தென்பகுதிகளில் உள்ள கட்சிகள் அனைத் தும் பலவிதமான எதிர் பிரசாரங்களை மேற் கொண்டுள்ள நிலையில் பிரதமர் ஹரணி அமரசூரியா தாம் இந்த தேர்தலில் மூன்றாவது வெற்றியை உறுதிப்படுத்துவோம் என கூறியுள் ளார்.

அவருடைய கூற்றில் இலங்கையில் தென் பகுதிகளில் அனேகமான சபைகளில் அவர்கள் ஆட்சியமைக்க கூடிய கள நிலை இப்போதும் உண்டு என்பதில் மாற்றுக்கருத்துகள் இல்லை.

ஆனால் வடகிழக்கை பொறுத்தவரையி லும் தேசிய மக்கள் சக்திக்கு எதிராகவே சகல தமிழ்த்தேசிய கட்சிகளும் பரப்புரைகளை ஆரம்பித்துள்ளனர். கடந்த பொதுத்தேர்தலில் என்று மில்லாத வகையில் தேசியமக்கள் சக்தி வட கிழக்கில் இருந்து ஏழு தமிழர்கள் பாராளு மன்ற உறுப்பினர்களாக தெரிவான நிலையில் இந்த உள்ளூராட்சி தேர்தலில் தமிழ்தேசிய கட்சி களுக்கு வாக்களிக்க வேண்டும் என்ற பிரசாரங் கள் தமிழ் மக்கள் மத்தியில் பலராலும் முன்வைக் கப்பட்டாலும் தமிழ் தேசிய கட்சி களிடையே ஒற்றுமை இன்மை, இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி இப்போதும் இரண்டு அணி என்ற நிலையில் பிரசாரங்களில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஒற்றுமையாக பிரசாரங்களை இந்த தேர்தலில் மேற்கொள்ளாத நிலைமை தொடர்வதால் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு வெறுப்புத்தன்மை இந்த தேர்தலில் காண முடிகிறது.

உள்ளூர் வட்டாரங்களில் ஊர் செல்வாக்கை பெற்றவர்கள் கட்சி செல்வாக்குகளுக்கு அப்பால் இந்த தேர்தலில் தெரிவாகும் வாய்ப்புகள் அதிகள வில் காணப்பட்டாலும் வடகிழக்கை பொறுத்த வரை தேர்தலின் முடிவு என்பது தமிழ்தேசியத் துக்காக மக்கள் உறுதியாக உள்ளனரா அல்லது அதில் இருந்து விலகி சென்றுள்ளனரா என்ற முடிவுகளும் இந்த தேர்தலில் தமிழ்தேசிய கட்சிகளுக்கு வாக்க ளிக்காமல் விட்டால் ஏற்படலாம்.

அரசியல் என்பது அடிமட்டத்தொண்டர் களுக்கு விழிப்பூட்டி எதிர்கால தேவைகளை அடைய வேண்டுமானால் அது ஊர்களில் இருந்து தொடங்கி பிரதேசம், மாவட்டம், மாகாணம், தேசி யம் கடத்தப்படுவதற்கு அடிமட்ட உள்ளூராட்சி தேர்தல் ஒரு அத்திவாரமாக அமைகிறது. இது கட்டாயம் ஈழவிடுதலைக்காக போராடிய இனம் போராடிக்கொண்டிருக்கும் இனம் அந்த விடுதலை தேவையை உணர்த்தும் வகையில் தமிழ்மக்கள் சிங்களக்கட்சிகளுக்கு சோரம் போகாமல் தமிழ்த் தேசிய கொள்கையுடன் உள்ளனர். அதனை பலப் படுத்தும் நோக்கில் ஏதோ ஒரு தமிழ்தேசிய கட்சிகளுக்கும் அந்த கட்சிகளில் கொள்கையில் உறுதியானவர்களுக்கும் வாக்களிக்க வேண்டிய தார்மீக கடமை தமிழர்களுக்கு உண்டு.

தனிநபர் புகழ்ச்சி, தனிநபர் வெறுப்பு, தனிநபர் நடிப்பு, தனிநபர் ஆளுமை என்பன சில தமிழ்தேசிய கட்சிகளில் அடிப்படை கொள் கையை சிதைத்து விடுகிறது. அதனை விட்டு விலகிச்செல்லும் அபாயச்சூழல் தற்போது கடந்த 2009, மே,18, க்கு பின்னர் கடந்த 16, வருடங்களாக வடகிழக்கில் தொடர்ச்சியாக காணமுடிகிறது.

உதட்டால் தேர்லுக்காக வாக்குகளை பெறவும் ஆதரவை பெறவும் தேசிய தலைவரையும், மாவீரர்களையும், அன்னை பூபதி யையும், தியாகி திலீபனையும் தமிழ்தேசியத் தையும் உச்சரித்துக்கொண்டு சிலர் சிங்கள தேசியத்திற்கு துணை போகின்ற போக்கை காண லாம். இப்படியானவர்கள் சில தமிழ்தேசிய கட்சிக ளில் பதவி நிலைகளில் இருந்து தமிழ்தேசிய கொள்கைபற்றாளர்களை ஓரம் கட்டும் நிலை தொடர்வதாலும் இந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் மக்கள் வெறுப்படைந்து தேர்தலில் ஆர்வம் காட்டாத சந்தர்ப்பங்களும் உண்டு. இதனாலும் அறுதிப்பெரும்பான்மை ஆதரவு இன்றி தனித்து ஆட்சியமைக்க முடியாத நிலை ஏற்படலாம்.



வடகிழக்கை பொறுத்தவரை எதிர்வரும் மே 7, ம் திகதி தெரியவரும் பிரதேச, நகர, மாநகர, சபைகளில் ஆசனங்களை கூடுதலாக யார் பெறுகிறார், எந்த கட்சி பெறுகிறது என்பது தெரிந்துவிடும். என்னை பொறுத்தவரை எந்த சபைகளும் தனித்து ஆட்சியமைக்க கூடிய கள நிலை எந்த ஒரு கட்சிக்கும் தற்போது இல்லை. சேர்ந்து ஆட்சியமைக்கும் சூழலே உண்டு. அப்படியானால் தற்போது தேர்தல் பிரசாரங்களில் எதிரும் புதிருமாக பிரசாரங்களை மேற்கொண்ட கட்சிகள் தெரிந்தோ தெரியாமலோ இணைந்து சபைகளில் ஆட்சியமைக்கும் தேவை உண்டு.

இவ்வாறுதான் கடந்த 2018 லும் நடந்தது. இதில் தேசிய மக்கள் சக்தி ஆசனங்களை சில சபைகளில் பெற்றாலும் அவர்களும் ஏதோ ஓர் இரு கட்சிகளை சேர்த்தே ஆட்சியமைக்கும் சூழல் உண்டு.

தமிழ்தேசிய கட்சிகள் எக்காரணம் கொண் டும் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஆட்சியமைக்கும் நிலை உருவாகாமல் இருப்பதே தமிழ்த்தேசியத்தின் வெற்றியின் நகர்வை

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

நேர்காணல்

# செயல்திறன் அற்ற தமிழ் அரசியல்வாதிகளும் பசப்பு வார்த்தை கூறி மக்களைத் திசைதிருப்பும் அநுர அரசும்

**உயிரோடைத் தமிழ் வானொலிக்கு திருமிகு நாகராசா வர்ணகுல சிங்கம் அளித்த செவ்வி யின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தரப்படுகின்றது. இந்த நேர் காணலை காணொளியில் முழுமையாக பார்வையிட YouTube இல் முழு மையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**



***அநுரகுமார திசநாயக்க தலைமையிலான NPP அரசு, உள்ளூராட்சி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் போலியான தேர்தல் வாக்குறுதிகளை வழங்குவதாக ஒரு குற்றச்சாட்டு முன் வைக்கப்படுகின்றது. இந்த நிலையில், அக்கட்சி கடந்த தேர்தல்களில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளதா?***

NPP அரசாங்கம், ஆரம்பத்திலேயே எங்களது தமிழ் தேசியம், தமிழ் மொழி அனைத் தையும் அழிக்க வேண்டும் என்று ஒரு கங்கனம் கட்டி நின்ற ஒன்றுதான்.

அதே நேரம் தற்போது NPP அரசாங்கத்தில் கடற்றொழில் அமைச்சராக இருக்கும் சந்திரசேகர், தமிழ் பகுதியில் கொல்லப்படுபவர்கள் அனை வரும் விடுதலைப் புலிகள் என்று ஒரு பொய் யான பிரச்சாரத்தை செய்தவர். ஜே.வி.பி அமைப்பு தமிழ் மக்களை அழிக்க வேண்டும் என்பதில் முன்னின்றது. அத்துடன் கடந்த 2004ம் ஆண்டு சுனாமி பேரலை அழிவின் போது, தமிழர் பகுதிகளில் பெரும் அழிவு ஏற்பட்டது. அப்போது சர்வதேசத்தின் கவனத்தையும் பெற்றதுடன் பெரும் உதவிகளும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க பல நாடுகள் முன் வந்தன. ஆனால் குறித்த உதவிகள் தமிழ் மக்களுக்கு வழங்க ஜே.வி.பி மறுத்துவிட்டது.

இன்று பல்கலைக்கழக மாணவர்களை தமது கைக்குள் வைத்துக்கொண்டு அரகலாய போராட்டத்தை நடத்தி அதன் மூலம் கோட்டாபய அரசாங்கத்தை வெளியேற்றி ''நாம் ஒரு மாற்றம் கொண்டு வருகின்றோம்'' என்று கூறித்தான் ஆட்சிக்கு வந்தார்கள்.

ஆனால் ஜனாதிபதித் தேர்தலில், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, மீள் குடியேற் றம், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்தான விசாரணைகள் தமிழ் மக்கள் பிரச்சினைக்கு தீர்வைத்தருவோம் என்று பலவிதமான வாக்குறு களை வழங்கிய இந்த NPP அரசாங்கம், ஆட்சி அமைத்த பின் எந்த ஒரு வாக்குறுதிகளையும் நிறைவேற்ற வில்லை. அதன் பின் நாடாளு மன்றத்தேர்தலில் சில மக்களுக்கு உதவிகளை வழங்கி, அந்த உதவிகள் ஊடாக மக்களை ஏமாற்றி, யாழ்மாவட்டத்தில் மூன்று சீட் எடுத்தார்கள். யாழில் ஒரு கட்சிக்கு மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதும் வரலாற்றில் இதுதான் முதல் முறை. ஆனால் வழங்கிய எந்த வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை.

இதில் மக்களை குறை கூற முடியாது, எங்கள் தமிழ் அரசியல்வாதி கள் ஒரு போலியான அரசியல் நடத்தி கொண்டிருக்கிறார்கள். யுத்தம் முடிந்து 16 வருடம் ஆகிவிட்டது. இதுவரையில எங் களுக்கு எந்தவிதமான ஒரு பிரயோசனம் இல்லை. ஒரு அபிவிருத்தி இல்லை. மக்கள் மீள குடியேற்றப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட் டோருக்கான ஒரு தீர்வு இல்லை. இவற்றில் எங்களது தமிழ் அரசியல்வாதிகள் கவனம் செலுத்தவில்லை.

மைத்திரிபால சிறிசேனா ஜனாதிபதியாக இருந்த காலத்தில், சர்வதேசம் ஒரு போர் குற்ற விசாரணைக்காக இலங்கை அரசாங்கத்தை அழைத் தது. அதற்கு இலங்கை அரசாங்கம் இரண்டு வருட கால அவகாசம் கேட்டார்கள்.

அத்தோடு தமிழ் அரசியல் கட்சிகளை கேட்டு அவர்கள் இதற்கு கூறும் முடிவைதான் நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்றும் கூறியிருந்தது.

ஆனால் இந்த விடயத்தில் தமிழ் அரசி யல் வாதிகள் அரசாங்கத்துக்கு ஆதரவாக செயற் பட்டார்கள். அவ்வாறு அவர்கள் செய்யாது விட்டிருந்தால் இன்று போர் குற்ற விசாரணை முன்னெடுப்பது தொடர்பில் ஒரு காத்திரமான செயற்பாடு நடைபெற்றிருக்கும்..

***வல்வெட்டித்துறையில் ஜனாதிபதி கடந்த மாதம் சென்றிருந்தார். இந்த நிகழ்வு குறித்து உங்கள் கருத்து?***

இந்த நிகழ்வுக்கு நானும் சென்று இருந் தேன். அது ஒரு மக்கள் அதிகம் வந்து செல்லும் கடற் கரை. உண்மையில் வல்வெட்டித்துறை மக்கள் அங்கு சென்றிருக்கவில்லை.

அத்தோடு நிகழ்வுக்கான கொட்டகைகள் அமைப்பது முதல் அனைத்து செயற்பாடுகளையும் இராணுவம் மற்றும் புலனாய்வுத்துறையினரே செய்தனர். இதில் அப்பிரதேச மக்களின் எந்த பங்களிப்பும் இருக்கவில்லை.

அத்தோடு கடற்கரை ஒரு பொது இடம். அங்கு யாரும் வரக்கூடாது என்று நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்க முடியாது. சிங்கள அரசாங்கத்தின் ஆட்சி தான் நடக்கின்றது. எனவே அவர்கள் எங்கும் சென்று வரலாம். எதிர்ப்பு தெரிவித்தால் அவர்கள் அதற்கு ஒரு சட்டத்தை உருவாக்கி அதை நடைமுறைப்படுத்துவார்கள். அத்தோடு அந்த நிகழ்வில் கலந்துகொண்ட 90 வீதமான மக்கள் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மக்கள் கிடை யாது. மேலும் வெளி பிரதேசங்களில் இருந்து பேருந்துகள் மூலம் அழைத்து வரப்பட்டவர்கள்.

அந்த நிகழ்வில் ஜனாதிபதியுடன் கைக்கும் அம்மாவும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர் இல்லை.

முன்னர் ஒரு முறை வல்வெட்டித்துறையில் நடைபெற்ற பட்டம் ஏற்றும் திருவிழாவுக்கு முன்னாள் ராஜ பக்சவின் மகன் நாமல் ராஜ பக்சவை அழைப்பது குறித்து தகவல் வெளியான போது, புலம் பெயர் தமிழர்களின் கடுமையான எதிர்ப்பு காரணமாக அவர் வரவழைக்கப்படவில்லை. ஜனாதிபதி அ நுர குமர வல்வெட்டித்துறையில் வழங்கிய எந்த வாக்குறுதிகளும் இது வரையில் நிறைவேற்றப்படவில்லை. போலியானவாக்குறுதி களையே அவர் வழங்கிச் சென்றிருந்தார்.

பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள் ளது. மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும் அரசியல் வாதிகளையே குறை கூறுவதாக கேள்வி கேட்டீர்கள், நாம் 2009 ஆண்டுக்குப் பின் வன்னியில் இருந்து வரும் போது உடுதுணி கூட இல்லாமல் வந்தோம். திரும்பவும் 'அ' வில் இருந்துதான் வாழ்க்கையைத் தொடங்கினோம். அனைத்து மக்கள் விரக்தியுடந் தான் வந்தோம். எனவே அனைத்து மக்களையும் அரவணைக்க வேண்டிய பொறுப்பு எங்கள் அரசியல் வாதிகளிடம் தான் இருந்தது. அத்துடன் அனைத்து அரசியல் கட்சிகளும் எங்கள் மக்களுக் காக ஒன்று சேர்ந்திருக்க வேண்டும். அதே நேரம் பொதுவாக்கெடுப்பை சர்வதேசத்திடம் கோரி யிருக்க வேண்டும்.

***இன்றைய கால சூழலில் பொதுவாக்கெடுப்பது நடைபெற்றால், எங்களுடைய அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகைக்குத்தான் தமிழ் மக்கள் வாக்களிப்பார்களா?***

இது தொடர்பில் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பழைய மாணவர்கள் இருவர், நாங்கள் ஒரு கடற்தொழில் அமைப்பு என்ற ரீதியில் எங்க ளோடு பேசினார்கள், அவர்களுக்கு நாங்கள் முழு ஒத்துழைப்பை வழங்கினோம். இதில் புத்திஜீவிகளும், 80க்கும் மேற்பட்ட அமைப்புக்க ளும் இணைந்து கொண்டார்கள், அந்த செயற் பாட்டில்தான் சங்கு சின்னம் உருவாக்கப்பட்டு ஜனாதிபதித்தேர்தலில் பா. அரிய நேத்திரனை வேட்பாளராக போட்டியிட வைத்து பெரும் வெற்றியை பெற்றோம், ஆனால் பின் அதில் சில அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டு, தற்போது சங்கு சின்னம் இல்லாமல் போய்விட்டது. இதில்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# தேர்தல் கால வாக்குறுதிகளும் வேட்பாளர்களும்

கிண்ணியான்

ஒரு ஜனநாயக நாட்டில் தேர்தல் அடிக்கடி இடம் பெறுவது அதன் பண்புகளில் ஒன்றாக காணப்பட்டாலும் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதன் பின் பொதுத் தேர்தல் நடைபெற்று முடிந்த நிலையில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் எதிர்வரும் 2025.05.06 ந் திகதி இடம் பெறவுள்ளது. இதனை அடுத்து பல கட்சிகள், சுயேட்சை குழுக்களை சேர்ந்த வேட்பாளர்கள் வெற்றிக்காக உழைத்து வருகின்றனர். இதற்காக மக்கள் மத்தியில் வீடு வீடாக சென்று பிரச்சார நடவடிக்கைகளிலும் தேர்தல் பரப்புரை கூட்டங்களையும் நடத்தி வருவதை அவதானிக்க முடிகிறது.




எது எவ்வாறாக இருந்த போதிலும் தேர்தல் காலங்களில் மக்களிடம் வாக்குகளுக்காக பல பொய் வாக்குறுதிகளை வழங்கி வருகின்றனர். இது குறித்து திருகோணமலையை சேர்ந்த சிவில் சமூக செயற்பாட்டாளர் கோகிலா தெரிவிக்கையில் ஆனாலும் தற்போதைய அரசாங்கம் உள்ளூராட்சி மன்றங்களையும் தங்கள் கைகளில் கொண்டு வர பல முயற்சிகளை மேற்கொள்கின்றனர் இவ்வாறான நிலையில் வேட்பாளர்கள் பதவிகளை தக்க வைக்கவும் ஆட்சியில் இடம்பிடிக்கவும்காலாகாலம்பலவாக்குறுதிகளை மக்களிடத்தில் வழங்குகின்றனர். ஏமாற்றத்துடன் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நிலையில் அரசியலுக்காக பிழைப்பு நடாத்துகின்றனர் இவ்வாறான நிலை எதிர்காலத்தில் மாற வேண்டும் என்றும் தமிழ் பிரதேசங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களை குறைத்து தங்கள் பிரதேச அதிகாரங்களில் அக்கறை கொண்டு தற்போதைய அரசாங்கம் செயற்படுகின்றது “ என்றார்.

தேர்தல் காலத்தில் மாத்திரம் மக்கள் செல்வாக்கினை பெற பல பிரயத்தனங்களை கையாள்கின்றனர் இதனால் பல கட்சிகளுக்கிடையில் பல போட்டிகள் வட்டாரங்களில் இடம் பெறுகின்றது . இக் குறித்த உள்ளூராட்சி மன்ற தேர்தலின் போது மாநகர சபை, நகர சபை, பிரதேச சபைகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்கள் வட்டார மக்களின் செல்வாக்குகளை பெற மறைமுகமான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் இதனால் வன்முறைச் சம்பவங்கள் கூட இடம் பெற்றுள்ளன இதனை கண்காணிக்க பல தேர்தல் கண்காணிப்பு குழு மற்றும் முறைப்பாடுகளை மக்கள் முறைப்பாடு செய்ய மாவட்ட ரீதியில் தேர்தல் ஆணைக்குழு மூலமான அரசாங்க தேர்தல் திணைக்களங்கள் நிறுவப்பட்டுள்ளன இதனடிப்படையில் தேர்தல் ஆணைக் குழுவின் தகவலின் படி மார்ச் 20 தொடக்கம் 30 வரையான காலப் பகுதியில் மொத்தமாக 3828 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் இதில் 24 வன்முறைச் சம்பவங்களும், தேர்தல் சட்ட மீறல் தொடர்பில் 3563 முறைப்பாடுகளும் ஏனைய முறைப்பாடுகளாக 241 உம் காணப்படுகிறது.

இவ்வாறான தேர்தல் நிலவரங்கள் குறித்து நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் (CAFFE) நிறைவேற்றுப்




பணிப்பாளர் மனாஸ் மகீன் தெரிவிக்கையில் “அண்மையில் நடைபெற்று முடிந்த இரு தேர்தல்களையும் வைத்து ஒப்பிடுகின்ற போது மக்களின் ஆர்வம் இம் முறை தேர்தலில் சில பிரதேசங்களில் குறைவாக உள்ளதை அவதானிக்க முடிகிறது. இதற்கான காரணமாக 2024 ல் அண்மையில் ஜனாதிபதி தேர்தல் ,பொது தேர்தல் நடந்து முடிந்துள்ளது. 2018ல் இறுதியாக உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் இடம் பெற்றது இருந்த போதிலும் இம் முறை சட்டவிரோத தேர்தல் பிரச்சாரம், வன்முறைச் சம்பவங்கள், அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தல் போன்றன குறைவாகவே உள்ளது. பிரச்சார அதிகரிப்பு அதிகமான ஆர்வம் வன்முறை சம்பவங்கள் தேர்தலுக்கு பின்பு அதிகமாக இடம் பெறவாய்ப்புள்ளது மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான் குடி மற்றும் திகாமடுல்லவில் உள்ள அக்கரைப்பற்று,சம்மாந்துறை, பொத்துவில் யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ் நகர், சாவகச்சேரி போன்ற பிரதேசங்களில் வன்முறை சம்பவங்கள் இடம் பெறலாம் என அவதானிக்கப்படுவதுடன் தற்போதைய நிலையில் சுமூகமாக உள்ளது” என்றார்.

இவ்வாறான சூழ் நிலையில் ஆளும் அரசாங்கம் உட்பட தேசிய கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி பல பிரச்சாரங்கள் உட்பட பல ரூபாக்களை இதற்காக செலவு செய்கின்றனர் . வேட்பாளர்கள் தங்களின் வெற்றிக்காக தேர்தல் விளம்பரங்களுக்காக பதாகைகள்,ஸ்டிக்கர்கள் உள்ளிட்டவற்றை தங்கள் வட்டாரங்களில் உள்ள பகுதிகளில் காட்சிப்படுத்தியும் ஒட்டியும் வருகின்றனர். இது சட்டத்துக்கு முரணாக இருந்த போதிலும் தலை மறைவில் நின்று இரவு நேரங்களில் பொலிஸாருக்கு தெரியாமல் செய்து வருகின்றனர்.

இது குறித்து ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெசனல் நிறுவனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது . குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட சில விடயங்கள் பின்வருமாறு “ தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கைகள் மற்றும் ஊடக வெளியீடுகளின் படி தற்போதைய உள்ளூராட்சி மன்ற தேர்தல் காலத்தில் தேர்தல் சட்ட மீறல்களில் குறிப்பிடத்தக்க குறைவு ஏற்பட்டுள்ளதை ட்ரான்பேரன்சி இன்டர்நெசனல் ஸ்ரீலங்கா (TISL) அவதானிக்கிறது. ஆளுங்கட்சி பிரதிநிதிகளை அதிக எண்ணிக்கையில் தேர்ந்தெடுக்கும்உள்ளூராட்சிபிரிவுகளுக்குமுன்னுரிமை அளிப்பதாக ஜனாதிபதி வெளியிடும் சர்ச்சைக்குரிய பொது அறிக்கைகள் கவலையை அதிகரிக்கின்றன இத்தகைய கருத்துகள் வாக்காளர் சுதந்திரத்தின் மீது முறையற்ற செல்வாக்கு செலுத்தப்படுவதற்கான தீவிர கவலைகளை எழுப்புகின்றன. மேலும் செயல்படும் ஜனநாயகத் திற்கு அவசியமான சமத்துவம் ,பாரபட்சமின்மை, பொறுப்பான தலைமைத்துவம் ஆகிய கொள்கைகள் கவலைக்குரிய வகையில் புறக்கணிக்கப்படுவதையும் இது வெளிப்படுத்துகின்றது.

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை உறுதி செய்வதற்கும் ,தேர்தல் முடிவுகளின் நம்பகத் தன்மையை பாதிக்கக் கூடிய எந்தவொரு செயலையும் தவிர்ப்பதற்கும் ,மீண்டும் தங்களை அர்ப்பணிக்குமாறு அனைத்து அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் பொது அமைப்புக்களை TISL கேட்டுக் கொள்கிறது. என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்தில் மாத்திரம் வாக்கு கேட்டு வரும் இவர்கள் தேர்தல் முடிந்ததன் பிற்பாடு கவனிப்பாரில்லை எமது கிராமத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் பல குறைகளாக காணப்படுகிறது ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்றினால் தான் எம்மை போன்ற பாமர மக்களுக்கு விடிவு கிடைக்கும் என திருகோணமலை நகரை சேர்ந்த சாரதியான விஜயன் தெரிவித்தார்.

எல்லா கட்சிகளும் வாக்குகளைப் பெறுவதற்காக மட்டுமே செயல் படுகின்றன; மக்கள் நலனில் உண்மையான பற்றுதல் குறைவாகவே உள்ளது.




முன்னர் ஆட்சி செய்த அரசாங்கம் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை; புதிய வேட்பாளர்கள் வந்தால் ஏதேனும் மாற்றம் வரும் என நம்புகிறோம். என்ற நிலைப்பாடே மக்கள் மத்தியில் காணப்படுகிறது .

இம் முறை தேர்தலைப் பொறுத்தமட்டில் சமூக வலைத்தளங்கள் வழியாக அரசியல் விழிப்புணர்வு அதிகரித்துள்ளது. இப்போது வேட்பாளர்களின் உண்மையான செயல்பாடுகளை அனைவரும் அறிந்துகொள்கிறோம்.”ஒட்டுமொத்தமாக ஏனைய தேர்தல்களை விடவும் தற்போது இடம் பெறவுள்ள தேர்தல் மக்கள் தங்கள் உள்ளூர் பகுதிகளை அபிவிருத்தி செய்யவும் நிலையான அபிவிருத்திக்காகவும் காத்திருக்கின்றனர்.

“குப்பை அகற்றும் பணிகள் முறையாக நடைபெறவில்லை; தெருக்களில் கழிவுகள் குவிந்து கிடக்கின்றன.” இதனை சீர் செய்யவேண்டும் என்பதுடன் நீர் வழங்கல் மற்றும் பாதை சீரமைப்பு போன்ற அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும்.” தேர்தல் வாக்குறுதிகள் “கடந்த தேர்தலில் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை; இம்முறை மாற்றம் வேண்டும்.” என்பதை வாக்களித்த மக்கள் எதிர்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



# திருத்தந்தை பிரான்சிசும் புவிசார் அரசியலில் ஆசிய மைய நகர்வும்

## பகுதி 2 (இறுதிப் பகுதி)

அருட்பணி **எழில்ராஜன்**

பெருநிலப்பரப்புவாதம்(Continentalism) அல்லது தலைநிலப்பகுதிவாதம் புவிசார் அரசியல் ஒரு கருத்தியலாகவே உருவாக்கப்பட்டு, இலத்தின் அமெரிக்க தேசத்திற் கான ஒருங்கிணைக்கும் கருவியாக உப யோகப்படுத்தப்பட்டது. பேர்கோலியோவின் குழு பெரு நிலப்பரப்புவாதக் கருத்தியலிற்கான அடிப்படைகளை கட்டமைத்தது மட்டுமல்லாது, இலத்தின் அமெரிக்க திருச்சபை, பூகோளத் திருச்சபையில் எவ்வாறு தனித்துவ பங்களிப்பை வழங்க முடியும் என்கின்ற வழிவரைபடத்தையும் முன்னிறுத்தியது. இதில் குறிப்பாக Aparecida ஆவணம் திருச்சபையின் புவிசார் அரசியலின் போக்கை குறிப்பிடுகின்றது. உதாரணத்திற்கு வெளிநாட்டுக் கொள்கை இலத்தின் அமெரிக்க ஒருங்கிணைப்பில் எவ்வாறு இருக்க வேண்டும் என அடிக்கோடிடுகிறது. ஒருங்கிணைவு வேறுபாட்டை ஊக்குவிக்கின்றது என்ற ஏற்பு ஏக பண்பாட்டை ஏற்றுக் கொள்வதல்ல.

மேற்குறிப்பிட்டதன் ஒரு அலகாகவே ''பொது மக்கள் இறையியலை'' நோக்க வேண்டும். பொது மக்கள் இறையியல் மேய்ப்புப்பணி அரசாங்கத் தன்மையையும் (Pastral Governmentality) புவிசார் அரசியலையும் ஒரே சட்டகத்திற்குள்ளிருந்து அணுக முயற்சிக்கின்றது. இவற்றிற்கு அடிப் படையான கருத்தியலாக மக்கள்-தேசம் (People Nation) இருப்பதோடல்லாமல், மக்களை ஒருங்கிணைக்கின்ற வெளியை உருவாக்கி சுயநிர்ணய உரிமைக்கான விருப்புரிமையை வழங்குகின்றது. இது விளிம்புமைய கட்டமைப்பை மாற்றாக முன்வைக்கின்றது.

திருத்தந்தை பிரான்சிசின் வரலாற்றுப் பரிணாமம் விளிம்புமைய புவிசார் அரசியலை உள்ளடக்கமாகக் கொண்டது. திருத்தந்தை பிரான்சிஸ் ஐரோப்பிய விரிவாக்கத்தை ஏற்றுக் கொள்ளாத ஒரு நபராக இருந்ததை அவதானிக்க முடிவதோடு பல்வகைத் தன்மையை யதார்த்தமானதாக, இயற்கையானதாக அங்கீகரித்து; ஐரோப்பிய அல்லது ஏகாதிபத்திய பேரரசுக் கட்டமைப்புகளின் ஏக பண்பாட்டு அரசியல் திட்டத்திற்கு ஒவ்வாததாக அதை மறுதலிக்கின்ற அல்லது அதற்கு மாற்றான ஒரு கருத்தியலை, ஒழுங்கை முன்னிறுத்தி நகர்வது துணிகரமிக்கது.

இச்செயற்திட்டம் மக்களை மக்களாகவே பார்க்கின்ற, அவர்களது கூட்டு இருப்பை உறுதி செய்வதாக அமைகின்றது. ஐரோப்பியமைய பார்வையை/ஐரோப்பிய/மேற்குல மையத்திற் கூடாக நோக்குகின்ற பார்வைப் பரப்பு இல்லாது போதல் என்பது ஏறக்குறைய ஏகாதிபத்திய பேரரசின் அலகுகளை இல்லாமற் செய்தலாகும். மூன்றாவது வழியூடாக அணுகுமுறையை மற்றமைகளை (Other) மையப்படுத்தி அவர்களை வரலாற்றின் கதாபாத்திரத்திரங்களாக உருவகித்து விடுதலையை உள்ளீடாக கொண்ட அணுகு முறையை எல்லாவற்றிலும் விரிவுபடுத்து கின்றது.

திருத்தந்தை தற்போதைய அரசியல் உலக ஒழுங்கை கண்டித்திருக்கின்றார். ஜோன் ஜக்கென்பெறி குறிப்பிடுகின்ற ''மூன்று உலகங்கள்'' மேற்கு, கிழக்கு, தெற்கு, உலக ஒழுங்கை வடிவமைக்கையில் எழுகின்ற போட்டி. இதில் குறிப்பிடப்படும் மேற்குலகு-ஐக்கிய அமெரிக்காவையம் ஐரோப்பாவையும் உள்ளடக்கியது. கிழைத்தேசம்-சீனாவையும் ரஷ்யாவையும், தெற்குலகு மேற்குலகல்லாத அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளைக் குறிக்கின்றது. மேற்குலகு நவதாராளவாத சனநாயகத்தையும் கீழைத்தேசம், மேற்குலக ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சமத்துவ இறைமையை, தனித்துவத்தை, பல்வகைமையை, அபிவிருத்தியை மனித உரிமையை முன்னோக்கி எடுத்துச் செல்கிறது. இவ்விரண்டுமே ஏகாதிபத்திய அதிகாரத்திற்கான போட்டியை தெற்கு நோக்கியும், தெற்கில் மேலும் பரவலாக்குவதற்கு முயற்சிக்கின்றது. தற்போதைய உலக ஒழுங்கு மிகை ஏற்றத்தாழ்வுகளை கொண்டிருப்பதை அவதானிக்கும் எவரும் அவற்றை கண்டிக்கத் தவற மாட்டார்கள். திருத்தந்தை பிரான்சிசும் தற்போதைய உலக ஒழுங்கை கண்டித்திருக்கின்றார். அவர் கண்டிப்பதற்குரிய காரணத்தின் வரலாற்றுப் பின்னணி பற்றிய தெளிவு மேலே கொடுக்கப்பட்டுள்ளது.

திருத்ததந்தை பிரான்சிஸ் தெற்குலகில் இருந்தே (ஆர்ஜென்டீனா) உதயமாகிறார். ஐரோப்பிய மைய திருச்சபைக்கு இது பெரும் சவாலாக இருந்திருக்கலாம். தனது பதவிக்காலத்தில் திருச்சபையை விளிம்பு மையத்தை நோக்கி நகர்த்த வேண்டும் என்பதில் தெளிவாக இருந்தமை அவரது நியமனங்கள் எழுத்துக்கள் உரைகள், பயணங்களின் மூலம் தெரிய வந்தன. அதேபோல் உலக யதார்த்தத்தையும் விளிம்புநிலை மையத்திலிருந்து நோக்க வேண்டிய தேவையை கற்பிதமாக அறிமுகப்படுத்தியிருப்பது பிரளய மாற்றமாக கருத வேண்டியிருக்கும். விளிம்புநிலை மைய நோக்கு நிலை, ஏக பார்வையைத் தவிர்த்து பல்வகைமையை யதார்த்தமாக ஏற்றுக் கொள்வதோடு மட்டுமல்லாது, வேறுபாட்டை அச்சத்திற்குரியதாகக் கருதாமல் பாராட்டப்பட வேண்டியதாக அணுகுகின்றது. இவ்வாறான அணுகுமுறை காலனித்துவம், நவதாராளவாத முதலாளித்துவம் உருவாக்கும் மற்றைமைகளை(Others) கதாநாயகர்களாக அல்லது திருச்சபையின் மையமாக மாற்றுவது; மேற்குலகு பார்க்க விரும்பும் யதார்த்தத்தையும், யதார்த்தத்தை ஆய்வுமுறைக்குட்படுத்தும் முறையியலையும் முற்றிலும் கேள்விக்குட்படுத்துகின்றது. இவ்வாறான முறையியலை அங்கீகரிப்பது மாற்றம் விளிம்பு நிலையிலிருந்து மட்டுமே வர முடியும் என்ற பட்டறிவிலிருந்து எழுகின்றது. அப்பட்டறிவு கோட்பாட்டு மையத்திலிருந்து விலகி மக்கள் மையத்திலிருந்து புறப்படுகின்றது. திருத்தந்தை பிரான்சிஸ் இம்முறையியலை புவிசார் அரசியலுக்கும், இறையியலுக்கும் அவசியமானதாக மாற்றினார்.

### புவிசார் அரசியலில் ஆசிய-மையத்தின் முக்கியத்துவம்

திருத்தந்தை பிரான்சிசின் புவிசார் அரசியலில் ஆசியா இரு காரணங்களுக்காக முக்கியத்துவம் பெற்றதாக Enrico Beltramini குறிப்பிடுகின்றார். முதலாவது, ஆசியாவின் அரசியல், சமூக,

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# பெருந்தோட்ட மக்களும் தேர்தல் வாக்குறுதிகளும்

இலங்கையில் உள்ளூராட்சிமன்ற தேர்தல் எதிர்வரும் 6ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ள நிலையில், பெருந்தோட்ட மக்களை மையப்படுத்திய பிரசார நடவடிக்கைகளும், தேர்தல் வாக்குறுதிகளும் கட்சிகளுக்கு ஏற்ப மாறுபட்டு காணப்படுகின்றன. பெரும்பாலும் சகல கட்சிகளும் பெருந்தோட்ட மக்களின் வேதனம் மற்றும் அடிப்படை உரிமைகள் குறித்தே கருத்துக்களை முன்வைக்கின்றன. இலங்கையில் காலத்துக்கு காலம் தேர்தல்கள் இடம்பெறுகின்ற போதிலும் அநேகமான தேர்தல் வாக்குறுதிகள் தொடர்ச்சியாக ஒரே மாதிரியானதாகவே காணப்படுகின்றன. பெருந்தோட்ட மக்களுக்கான தொழிற்சங்கங்கள் என கூறிக் கொள்ளும் அரசியல் கட்சிகள் கடந்த காலங்களில் மக்களின் வாக்குகளை பெற்று அவற்றின் அடிப்படையில் மத்திய அரசாங்கத்திடம் பேரம்பேசும் சக்தியாக மாற்றமடைந்தன. அவர்கள் எந்த அரசாங்கம் ஆட்சியமைத்தாலும் அந்த அரசாங்கத்தில் அமைச்சு பொறுப்புக்களையும் பெற்றனர். எவ்வாறாயினும் கடந்த ஜனாதிபதி, பாராளுமன்ற தேர்தல்களில் இந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கை போன்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கான ஆதரவு பெருந்தோட்ட மக்கள் மத்தியிலும் அதிகரித்துள்ளது.



இதனால் கடந்த காலங்களில் பிரிந்து செயற்பட்ட மலையக அரசியல் கட்சிகள் தற்போது அரசாங்கத்தை (தேசிய மக்கள் சக்தியை) எதிர்ப்பதற்காக மறைமுகமாக கூட்டிணைந்து செயற்படுகின்றன. பொது வெளியில் பிரிந்து செயற்படுவதை போன்று காண்பிக்கும் அரசியல் கட்சிகள் உள்ளுக்குள் இணைந்து செயற்படுவதாக சில அரசியல் ஆய்வாளர்களும் உறுதிப்படுத்தியுள்ளனர். குறிப்பாக கடந்த பாராளுமன்ற தேர்தலில் சில கட்சிகள் 'தங்களுக்கு வாக்களிக்காவிட்டால் மாற்று மலையக கட்சிகளின் பெயரை குறிப்பிட்டு அவற்றுக்கு வாக்களிக்குமாறு' கோரியிருந்தன. இது பெருந்தோட்ட மக்களிடையே முக்கிய பேசுபெருளாகவும் மாறியது. இந்தநிலையில் தற்போது உள்ளூராட்சிமன்ற தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் மாறுபட்ட வாக்குறுதிகளும் முன்வைக்கப்படுகின்றன. வாக்குறுதிகளை வழங்கும் மலையக கட்சிகளின் பட்டியலில் தற்போது



ஆளும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் இணைந்துள்ளது. அத்துடன் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற மே தின கூட்டங்கள் மற்றும் பேரணிகளிலும் இவ்வாறான வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. சில இடங்களில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான தொழிற் சங்கங்கள் மே தினக் கூட்டம் என்ற போர்வையில் அரசியல் கூட்டங்களையே நடத்தியிருந்தன.

### வாக்குறுதியின் ஆரம்பம்

கடந்த பல தசாப்தங்களாக தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கான வாக்குறுதிகளின் ஆரம்ப புள்ளி அவர்களுக்கான வேதனம் தொடர்பானதாகவே இருக்கும். ஆரம்பத்தில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான வேதன விடயத்தில் கூட்டு ஒப்பந்தம் காணப்பட்டது. தற்போது அந்த ஒப்பந்தமும் இல்லாத நிலையில் வேதன நிர்ணய சபையின் ஊடாக வேதன பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன. கடந்த காலம் முதல் தற்போது வரை பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த வேதனமே அரசியல் மேடைகளில்



முக்கிய பேசுபொருளாக அமைகின்றன. அடுத்தப்படியாக பெருந்தோட்ட மக்களுக்கான வீடமைப்பு திட்டம். கடந்த சில வருடங்களுக்கு முன்னர் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான நாளாந்த வேதனமாக 1000 ரூபாய் வழங்கப்பட வேண்டும் என வலுவான கோரிக்கைகள் மேலோங்கியிருந்தன. தங்களது தரப்பே அதனை பெற்றுத்தருமென பல அரசியல் கட்சிகளும் மக்கள் மத்தியில் சவால் விடுத்திருந்தன. எனினும் அந்த தொகையை எளிதில் அடைய

மருதன் ராம்

முடியவில்லை. நீண்ட போராட்டங்கள் மற்றும் பேச்சுவார்த்தைகளின் பின்னர் அந்த தொகையை பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கு பெருந்தோட்ட நிறுவனங்கள் இணங்கிய போதிலும் அதற்கு சில நிபந்தனைகளும் விதிக்கப்பட்டன.

உதாரணமாக 21 நாட்கள் தொழிலுக்கு சமூகமளித்திருக்க வேண்டும். நாளொன்றுக்கு குறிப்பிட்ட அளவான தேயிலையை பறிக்க வேண்டும் போன்ற நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.



இந்தநிலையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த 2024ஆம் ஆண்டு நுவரெலியா - தலவாக்கலை பகுதியில் இடம்பெற்ற கூட்டத்தில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாளாந்த வேதனமாக 1700 ரூபாய் வழங்கப்படும் என உறுதியளித்தார். அந்த சந்தர்ப்பத்தில் அவரை ஆதாரித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியும் இந்த வாக்குறுதியை வழங்கியிருந்தது. வேதன நிர்ணய சபையின் ஊடாக பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதனம் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெறுவதால் குறித்த தொகையை அறிவித்து அன்றைய தினமே தொழில் ஆணையாளரால் வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டது. எவ்வாறாயினும் அந்த வர்த்தமானி அறிவித்தல் பின்னர் ரத்து செய்யப்பட்டது. தொடர்ந்து பெருந்தோட்ட நிறுவனங்களுக்கும் பெருந்தோட்ட தொழிற் சங்கங்களுக்கும் இடையே தொழில் ஆணையாளரின் தலைமையில் பல சுற்று பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. இறுதியாக 1350 ரூபாய் என்ற நாளாந்த வேதனத்துக்கு இணக்கப்பாடு எட்டப்பட்டது. மேலதிக 350 ரூபாய் ஊக்குவிப்பு கொடுப்பனவான வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இருப்பினும் பல பகுதிக

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

கட்டுரை



# இந்திய - பாகிஸ்தான் போர் மூளுமா?

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் போர் ஆரம்பிக்குமா? அப்படிப் போர் ஆரம்பித்தாலும் யார் போரை முதலில் ஆரம்பிப்பது இந்தியாவா அல்லது பாகிஸ்தானா? என்ற கேள்விகள் பலர் மனதிலும் உண்டு. பல்ஹாம் பகுதியில் ஆயுததாரிகள் தாக்குதலை மேற்கொண்டு ஒருவாரம் கடந்துள்ள நிலையில் இருதரப்பும் எல்லைகளில் பெரும் படைக் குவிப்பை மேற்கொண்டு வருவதுடன் இரு நாட்டுக்குமிடையில் உள்ள 740 கி.மீ காஸ்மீர் எல்லைப் பகுதியில் பல நாட்களாக தொடர்ந்து துப்பாக்கி தாக்குதல்களிலும் ஈடுபட்டு வருகின்றன.


India vs Pakistan
Military Comparison


| | India | Pakistan |
|---|---|---|
| ACTIVE PERSONNEL | 1.45 Million | 654,000 |
| RESERVE PERSONNEL | 1.15 Million | 550,000 |
| TANKS | 4,800+ | 2,600+ |
| ARMORED VEHICLES | 12,000+ | 3,800+ |
| AIRCRAFT | 2,200+ | 1,400+ |
| NAVAL ASSETS | 295 | 114 |
| SUBMARINES | 17 | 11 |
| HELICOPTERS | 800+ | 320 |
| NUCLEAR WARHEADS (ESTIMATE) | 164 | 170 |

இந்தியாவில் உள்ள சமூக வலைத்தளங்கள் தமது வர்த்தக நலன்களை முன்நிறுத்தி போர் ஆரம்பிக்கும், இந்தியா பாக்கிஸ்தானை அழிக்கும் என்று எல்லாம் மணிக்கு ஒரு பதிவுகளை வெளியிட்டு வந்தாலும் கள யதார்த்தம் மாறுபட்டதாகவே இருக்கின்றது. முழு அளவிலான போரை இந்தியா ஆரம்பிக்காது, அதனை தடுக்கவே முற்படும்.

இருதரப்பும் தற்போது துப்பாக்கி தாக்குதல்களை பரஸ்பரம் நடத்தி வருகின்றன. அது மேலும் தீவிரமடைந்தால் அது ஆட்டிலறி அல்லது பல்குழல் உந்துகணை செலுத்தி தாக்குதல்களாக மாறி தீவிரமடையலாம். அது இருதரப்பிலும் பொதுமக்களுக்கு இழப்புகளை ஏற்படுத்தலாம். மேலும் இரு தரப்பும் ஒருவரின் வான்பரப்பில் தமது தாக்குதல் விமானங்களை பறக்க வைத்து தாம் எதிரியின் வான்பரப்புக்குள் நுழைந்துவிட்டதாக பாசாங்கும் காட்டலாம். ஆனால் குண்டுகளை வீசுவது என்பது முழு அளவிலான போருக்கே வழி வகுக்கும்.

**ஏன் இந்தியாவால் முழு அளவிலான போரை ஆரம்பிக்க முடியாது?**

ஏனெனில் இந்தியா பல முனைகளில் மிகப்பெரும் சவால்களை சந்தித்து நிற்கின்றது. அதிலும் முக்கியமாக 2019 ஆகஸ்ட் 5 ஆம் நாள் காஸ்மீரின் காணி அதிகாரத்தை உறுதிப்படுத்தும் 370 ஆவது சரத்தையும், 35ஏ சரத்தையும் நீக்கியிருந்தது.




அப்போது அதனை எதிர்த்த கஸ்மீர் அரசியல்வாதிகளை இந்தியா சிறையில் அடைத்தும், வீட்டுக்காவலில் வைத்தும் தனது அதிகாரத்தை நிலைநிறுத்தியிருந்தது. அதன் பின்னர் பாகிஸ்தானின் இறைமைக்கு தாம் எப்போதும் ஆதரவுகளை வழங்குவதாக சீனா தெரிவித்திருந்தது. சீனாவின் இந்த நகர்வு இந்தியாவுக்கு பல முனைகளில் சவால்களை தோற்றுவித்திருந்தது.




முதலாவது சவால் என்பது சீனாவின் எல்லையில் போடப்பட்டுள்ள கடும் பாதுகாப்பு, அதனை தாண்டி இந்தியா பாகிஸ்தானை நோக்கி ஆயுதங்களை நகர்த்துவது மிகவும் சிரமமான விடயம்.

இரண்டாவது மலைப்பகுதிகளில் இந்திய படையினருக்கான வழங்கல் மற்றும் விநியோக வழிகள். காஸ்மீர் மக்கள் இந்தியாவுக்கு ஆதரவாக

வேல்ஸில் இருந்து **அருஸ்**

இருக்கமாட்டார்கள். அவர்களின் இடத்தில் பெரும் படை குவிப்பு ஒன்று செய்யப்பட வேண்டும், கடும் பாதுகாப்பு அங்கு தேவை, அந்த பாதுகாப்பு இந்தியாவின் பாதுகாப்பான விநியோக வழிகளுக்கு முக்கியம். எனவே போரில் ஈடுபடும் படை அணிகளை விட மேலதிகமான படை அணிகள் கஸ்மீரின் பாதுகாப்பையும் இந்திய படையினரின் படை நகர்வையும் உறுதிப்படுத்த தேவை.



மூன்றாவது மரபு ரீதியான போர், முன்னைய அனுபவங்களின் அடிப்படையில் முதலாவது போரில் ஏற்படுத்தப்பட்ட காஸ்மீர் எல்லை இன்றுவரை மாறவில்லை. அதாவது காஸ்மீர் எல்லையின் பாதுகாப்பில் பாகிஸ்தான் கடும் நிலைப்பாட்டை கொண்டுள்ளது.




சீனா வசம் உள்ள கஸ்மீர் பகுதியின் வான்பரப்பைசீனாகடுமையாககட்டுப்படுத்துமாக இருந்தால் இந்திய வான்படை பயன்படுத்தும் வான்பரப்பு மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளது. மாற்றமடைவதுடன், அது வான் தாக்குதலில் இந்தியாவுக்கு அதிக அனுகூலங்களை வழங்காது. நான்காவதாக சைபர் தாக்குதல், செய்மதிகள் மீதான தாக்குதல், ஆளில்லாத தாக்குதல் விமானங்களின் தாக்குதல் எல்லாவற்றிலும் சீனா மிகவும் பலம் வாய்ந்ததாக உள்ளது. இந்தியாவின் இணையத் தளத்தையும் சீனா நிறுத்த முடியும்.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலி

## ஏன் தனித்துவமாகத் தெரிகின்றது?

அன்புள்ள அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலிக் குழுவினருக்கு,

தமிழ் அகதிகள் மன்றம் மற்றும் புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள எங்கள் பரந்த சமூகத்தின் சார்பாக, 15 ஆண்டுகளாக அமைதியாகவும், திரிபுகளற்ற மற்றும் அழுத்தங்களுக்கு மத்தியிலும் இடைவிடாத குரலாக, மண்டியிடாத ஊடகமான அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலிக்கு எங்கள் உளமார்ந்த மற்றும் மிகவும் சக்திவாய்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் வெறுமனே செய்திகளை வெளிக் கொண்டுவரவில்லை–எங்கள் மக்களின் துன்பத்தின் வெளிப்பாடாகவும், மீள்தன்மை மற்றும் எதிர்ப்பின் வடிவத்தின் உயிருள்ள காப்பகமாக நீங்கள் இருந்திருக்கிறீர்கள். ஊடகங்கள் கூட பெரும்பாலும் அரசு வன் முறைக்கு உடந்தையாக இருக்கும் ஒரு சகாப்தத்தில், உயிரோடை தமிழ் வானொலி உண்மையின் ஆயுதமாக இருந்து வருகிறது. உலகின் கவனத்தை கோரும் மற்றும் சமரசத்தை மறுக்கும் தீவிரத்துடன் இலங்கை அரசின் இனப்படுகொலை இயந்திரத்தை நீங்கள் ஆவணப்படுத்தி, பிரித்து, அம்பலப் படுத்தியுள்ளீர்கள். தமிழ் ஈழத்தை தொடர்ந்து அழித்து வரும் கட்டமைக்கப்பட்ட இனப்படு கொலை தொடக்கம்– எங்கள் நிலத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து எங்கள் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் உளவியல் போர் வரை – நீங்கள் வெளிப்படுத்தியுள்ளீர்கள்.

ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, கனடா அல்லது வேறு நாடுகளில் இடம்பெயர்ந்த நிலையில் உள்ள ஈழத்தமிழ்மக்களுக்கு பிறந்து வளர்ந்த நம்மில் பலருக்கு, எங்கள் பள்ளிகள் எங்களுக்கு ஒருபோதும் கற்பிக்காத உண்மைகளுக்கான முதல் சாளரமாக உயிரோடைதமிழ் வானொலி இருந்து வருகிறது. 2009 ஆம் ஆண்டுடன் எங்கள் போராட்டம் முடிவடையவில்லை என்பதை தமிழ் இளைஞர்கள் புரிந்துகொள்ள நீங்கள் வழிஏற்படுத்தீனீர்கள். அது தற்போது பரிணமித்து வருகின்றது. அது மேலும் வளர்ந்து வருகின்றது. மேலும், நமது ஒடுக்குமுறையாளர்களுடன் சமரசம் செய்வ தல்ல நீதி, எமது மக்களின் கனவுகளை சுமந்து, சுதந்திரச் சுடரை ஏந்திச் செல் வதே எங்கள் தலைமுறையின் கடமையாகும் என்பதை ஆணித் தரமாக உணர்த்தி வருகின்றது இந்த வானொலி.

சமீபத்தில் உங்கள் இரண்டு மூத்த ஊடகவியலாளர்களை சந்திக்கும் மகத்தான பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அது வெறும் உரையாடல் மட்டுமல்ல – அது ஒரு விழிப்புணர்வு. தலைமுறைகளுக்கு இடையேயான பொறுப்பின் முக்கியத்துவம், எதிர்ப்பைத் தொடர்வதில் இளைஞர்களின் பங்கு பற்றிய அவர்களின் பிரதிபலிப்புகளைக் கேட்பது மிகவும் நெகிழ்ச்சியாக இருந்தது. இந்த செயற்பாடு ஒரு காலத்திற்கு சொந்த மானது அல்ல – இது நம் மக்களின் இரத்தம் மற்றும் எலும்புகள் வழியாகக் கடத்தப்பட்ட எதிர்ப்பின் தொடர்ச்சி என்பதை அவர்கள் எனக்கு நினைவூட்டினர்.

அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலி ஏன் தனித்துவமாக தெரிகின்றது என்றால், நீங்கள் தூரத்திலிருந்து மக்களை அணுகவில்லை, மக்களுடன் பயணிக்கிறீர்கள், நீங்கள் எங்களுடன் நிற்கிறீர்கள். ஆஸ்தி ரேலியாவில் உள்ள தமிழ் இடம் பெயர்ந்தவர்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பைக் கோரி 129 நாட்கள் இடைவிடாத போராட்டத்தில் தெருக்களில் இறங்கியபோது, உயிரோடை தமிழ் வானொலியும் எங்களுடன் அங்கு நின்றது. தமிழ் அகதிகள் கவுன்சிலின் நியூசவுத் வேல்ஸ் ஒருங்கிணைப்பாளரையும், என்னையும், ஒரு தசாப்தத்திற்கும் மேலாக நிச்சயமற்ற நிலையில் வாழும் எங்கள் சக அகதிகளையும் நீங்கள் பேட்டி கண்டீர்கள். எங்கள் வலியை வெளிப்படுத்த வார்த்தைகளை நீங்கள் கொடுத்தீர்கள். எங்கள் போராட்டம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த நீங்கள் வழி ஏற்படுத்தினீர்கள். உலக அளவில் எங்கள் போராட்டத்திற்கு அர்த்தத்தை அளித்தீர்கள்.

அந்த 129 நாட்களில், முக்கிய ஆஸ்திரேலிய ஊடகங்களால் நாங்கள் புறக்கணிக்கப்பட்டோம், அரசியல்வாதிகளால் ஓரங்கட்டப்பட்டோம், இடம் பெயர்ந்த மக்களின் நிலையற்ற தன்மையால் பயனடையும் நிறுவனங்களால் நாங்கள் எரிக்கப்பட்டோம். ஆனால் அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலி எமது போராட்டத்தை வெளிக்கொண்டு வந்தது. எங்கள் துன்பத்தின் கதை – மேலும் முக்கியமாக, எங்கள் எதிர்ப்பு – கடல்களைக் கடந்தது என்பதை நீங்கள் உறுதி செய்தீர்கள். உள்ளூர் போராட்டத்தை உலகளாவிய அழுத்தமாக மாற்றியமைத்தீர்கள். அதுதான் கொள்கை ரீதியான ஊடகத்தின் சக்தி. அது tokenism அல்ல, வரலாற்றில் வேரூன்றிய ஒற்றுமையின் சக்தி.

உங்கள் பணியின் மூலம், இனப்படுகொலை என்பது கடந்த காலத்தின் ஒரு சம்பவம் என்ற மாயையை நீங்கள் அகற்றியுள்ளீர்கள். பலவந்தமாக காணாமல் போதல், நிலக் காலனித்துவம், கலாச்சார அழிவு மற்றும் மக்களின் அன்றாட வாழ்க்கையை இராணுவமயமாக்குவதன் மூலம் தமிழ் ஈழம் தொடர்ந்து இரத்தம் சிந்துகிறது என்பதை உலகிற்குக் காட்டியுள்ளீர்கள். மறப்பது என்பது குற்றத்தில் பங்கேற்பது என்பதை நீங்கள் எங்களுக்கு நினைவூட்டியுள்ளீர்கள். மறப்பதை சாத்தியமற்றதாக்கிவிட்டீர்கள்.

என்னைப் போன்ற இளைஞர்கள்– போரில் பிறந்த குழந்தைகள், இடம்பெயர்வில் இருந்து தப்பியவர்கள், மௌனத்தில் பிறந்தவர்கள் ஆனால் உண்மையால் விழித் தெழுந்துள்ளோம்– உயிரோடை தமிழ் வானொலி அதற்கு ஒரு நங்கூரமாக இருந்து வருகிறது. எதிர்ப்பு, கண்ணியம் மற்றும் தமிழ் தேசியத்தின் மொழியை மீட்டெடுக்க நீங்கள் எங்களுக்கு உதவியுள்ளீர்கள். எங்கள் துக்கம் அரசியல் சார்ந்தது, எங்கள் அடையாளம் வெட்கக்கேடானது அல்ல, எங்கள் கூட்டு எதிர்காலம் மோதலைக் கோருகிறது, இணக்கத்தை அல்ல என்பதை நீங்கள் எங்களுக்கு நினைவூட்டியுள்ளீர்கள்.

பதினைந்து ஆண்டுகள் உண்மையைச் சொல்வது ஒரு சிறிய சாதனையல்ல. அது ஒரு எதிர்ப்பின் செயல். அது தன் மக்கள் மீது கொண்ட அன்பின் செயல். மேலும் இது எங்கள் மக்களுக்கு – கடந்த காலம், நிகழ் காலம் மற்றும் எதிர்காலத்திற்கு கிடைத்த ஒரு பரிசு.

எங்கள் நினைவுகளுக்கு முன் இந்த வானொலி நின்றதற்கு நன்றி. மற்றவர்கள் சொல்ல அஞ்சியதை பேசியதற்கு நன்றி. தமிழ் மக்கள் தோற்கடிக்கப்படவில்லை என் பதை உலகிற்கு நினைவூட்டியதற்கு நன்றி – நாங்கள் எப்போதும் இல்லாத அளவுக்கு பலமாகவும் ஒற்றுமையாகவும் எழுவோம்.

அசைக்க முடியாத ஒற்றுமையுடன்,

**செல்வி ரேணுகா இன்பக்குமார்-**
செய்தித் தொடர்பாளர், தமிழ் அகதிகள் கவுன்சில்
5 ஆம் ஆண்டு சட்டம்/கலை மாணவி
மேற்கு சிட்னி பல்கலைக்கழகம்

# பேச்சுச் சுதந்திரம் உண்மையில் அவசியமா?

தமிழில்: ஜெயந்திரன்

## பகுதி 1



**மே மாதம் 3ம் திகதி பத்திரிகைச் சுதந்திரத்துக்கான பன்னாட்டுத் தினமாகும். இத்தினம் தொடர்பாக Free Speech: And why you should give a damn என்ற தலைப்பில் Jonathan Zimmerman என்பவர் வழங்கிய TED Talk இன் முதலாவது பகுதியின் மொழியாக்கத்தை இலக்கு வாசகர்களுக்குத் தருகிறோம்.**

நான் ஒரு வரலாற்று ஆசிரியன். வரலாற்றைப் பொறுத்த வரையில் ஒரு முக்கியமான விடயத்தை நான் கற்பிக்கிறேன். அது பேச்சுத் சுதந்திரத்தைப் பற்றியது.

பேச்சு சுதந்திரத்தைப் பற்றிப் பேசும் போது ஒரு கேள்வி எனக்குள்ளே மீண்டும் மீண்டும் எழுகின்றது. பேச்சுத் சுதந்திரத்தை உண்மையில் நாம் ஏன் அனுமதிக்க வேண்டும்? அதிலும் முக்கியமாக மற்றவர்களைப் பாதிக்கக்கூடிய விடயங்களை ஒருவர் பேசும் போது, ஒரு குறிப்பிட்ட சாரார் மீது வெறுப்பைத் தூண்டக்கூடிய வகையில் ஒருவர் பேசும் போது, அல்லது தவறான விதத்தில் ஓர் குறிப்பிட்ட விடயம் பற்றி ஒருவர் பேசும் போது, இன்னும் மற்றவர்களைப் பாதிக்கக்கூடிய வகையில் ஒருவர் பேசும் போது? இவ்வாறான சந்தர்ப்பங்களில் எல்லாம் எதற்காகப் பேச்சுச் சுதந்திரத்தை நாம் அனுமதிக்க வேண்டும் என்ற கேள்வி எனக்குள்ளே எழுகின்றது.



உண்மையில் இந்தக் கேள்வி ஒரு நல்ல கேள்வியாகவே எனக்குத் தெரிகிறது. ஒரு வரலாற்று ஆசிரியனாக இந்தக் கேள்விக்கு நான் பதிலளிக்க விரும்புகிறேன். இதற்கு விடையளிக்கும் முகமாக ஒரு சம்பவம் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இது மேரி பெத் ரிங்கரைப் பற்றியது (Mary Beth Tinker) . இந்தப் பெயரை நீங்கள் ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கலாம். வியட்நாம் போரில் அமெரிக்காவின் பங்குக்கு தனது எதிர்ப்பைப் பதிவுசெய்வதற்காக, 1965ம் ஆண்டு, வெறும் பதின்மூன்று வயதாகிய மேரி பெத் ரிங்கர், தனது கையிலே ஒரு கறுப்புப்பட்டியை அணிந்து அமெரிக்காவின் அயோவா (Iowa) மாநிலத்தில் உள்ள, டே மொயின் (Des Moines) என்ற இடத்தில் அமைந்துள்ள தனது இடைநிலைப் பள்ளிக்குச் சென்றார்.

இவ்வாறான ஒரு கருத்து வெளிப்பாடு பாடசாலைச் சமூகத்துக்குப் பொருத்தமற்றது எனக்கூறி பாடசாலை அதிகாரியினால் மேரி பெத் ரிங்கர் வீட்டுக்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து பாடசாலையில் பேச்சுச் சுதந்திரம் தொடர்பான ஒரு மிகவும் பிரபலமான வழக்கு ஒன்றில், மேரி பெத் ரிங்கர் வழக்குத் தொடர்ந்தார். டே மொயின் நகரத்துக்கு எதிரான வழக்காக அந்த வழக்கு அமைந்திருந்தது. நான்கு வருடங்களுக்குப் பின்னர் "பாடசாலைக்குக் கறுப்புப்பட்டி அணிந்து செல்ல மேரி பெத் ரிங்கருக்கு உரிமை இருக்கிறது" என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. பாடசாலைக்குள் நுழையும் பொழுது ஆசிரியர்களோ அன்றேல் மாணவர்களோ தமக்கான பேச்சு சுதந்திரத்தை உறுதிசெய்கின்ற அரசியல் சாசனத்தின் முதலாவது திருத்தத்தைக் கைவிடுவதில்லை (First Amendment) என்ற வாதத்தை நீதிமன்றம் அப்போது முன்வைத்தது.



உண்மையில் மேரி பெத் ரிங்கர் என்னை விட அதிகம் வயது கூடியவர் அல்ல. அவர் எனது காலத்தைச் சேர்ந்தவர். அதுமட்டுமன்றி அவர் எனது நண்பரும் கூட. சில வருடங்களுக்கு முன்னர் பென்சில்வேனியாவிலுள்ள எனது வகுப்பறைக்கு அவர் வருகை தந்து, தனது கறுப்புப் பட்டிக் கதை தொடர்பாக எனது மாணவர்களுடன் உரையாடினார். உரை முடிந்ததும் கேள்விகளுக்கான நேரம் வழங்கப்பட்டது. முதலாவதாகக் கேள்வி கேட்ட மாணவர் பின்வருமாறு கூறினார்: "செல்வி ரிங்கர் அவர்களே நீங்கள் ஒரு நல்ல நோக்கத்துக்காகப் போராடினீர்கள். அப்போது வியட்நாமில் அமெரிக்காமேற்கொண்டிருந்தயுத்தத்துக்குஎதிராக நீங்கள் போராடினீர்;கள். ஆனால் இப்போது பலர் மக்களை நோகச் செய்யக்கூடிய பல கருத்துகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இவ்வாறானவர் பேசுவதற்கு நாங்கள் உண்மையில் அனுமதிக்க வேண்டுமா? என்றார். அப்போது மேரி பெத் ரிங்கர் பின்வருமாறு பதிலளித்தார். அன்று 1965 இல், நான் கல்வி கற்ற டே மொயின் வாறன் ஜி ஹாடிங் (Warren G.Harding Middle School) இடைநிலைப் பள்ளியைச் சற்று நினைவில் கொள்ளுங்கள்! எனது வகுப்பில் பல பிள்ளைகள் கல்வி கற்றுக்கொண்டிருந்தார்கள். அவர்களது தந்தைமார், சகோதரர்கள், மாமன்மார் என அவர்களது உறவுகள் பலர் அப்போது அந்தத் தென்னாசிய நாட்டில் நடைபெற்ற போரில் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். எனது செயல் அவர்களுக்கு நோவை ஏற்படுத்தியிருக்க மாட்டாது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அவர்களது உறவுகள் எல்லாரும் ஒரு அர்த்தமற்ற விடயத்துக்காகப் போராடுகின்றார்கள் என்பதைச் சுட்டிக்காட்டும் போது, அவர்களுக்கு அது பாதிப்பை ஏற்படுத்தியிருக்க மாட்டாதா?



நிச்சயமாக எனது செயல் அவர்களுக்கு நோவைத் தந்தது. அது அவர்களைப் பாதித்தது. எமது பேச்சு நிச்சயமாக மற்றவர்களைப் பாதிக்கிறது. ஒரு பேச்சு மற்றவர்களைப் பாதிக்கவில்லை என்றால் அதனை நாங்கள் கருத்தில் எடுக்க வேண்டிய தேவை இல்லை. பொருள் பொதிந்த எந்தப் பேச்சும் மற்றவர்களைப் பாதிக்கும் என்பது தான் உண்மை. நிச்சயமாக எனது பேச்சு மற்றவர்களைப் பாதித்தது. மற்றவர்கள் பாதிக்கப்படுகின்றார்களா இல்லையா என்பதை வைத்து நீங்கள் பேச்சு சுதந்திரத்தை அளவிடப் போகின்றீர்கள் என்றால் மேரி பெத் ரிங்கரை நீங்கள் மறந்துவிடுங்கள். உண்மையில் பேச்சுச் சுதந்திரத்தையே மறந்துவிடுங்கள்.

அப்போது இன்னொரு மாணவர் இன்னொரு கேள்வியைத் தொடுத்தார். "பேச்சு சுதந்திரம் தொடர்பான விவாதம் வெறும் யதார்த்தத்துடன் தொடர்பற்ற ஒரு விவாதமாக உங்களுக்குத் தெரியவில்லையா? உண்மையில் இது அதிகாரம் தொடர்பானது. ஒரு சிலருக்கு அதிகாரம் இருக்கிறது. இன்னும் சிலரிடம் அந்த அதிகாரம் இல்லாமல் இருக்கிறது. யார் யாரெல்லாம் அதிகாரத்தைக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் பேச்சுச் சுதந்திரம் பற்றிப் பேச விழைகின்றார்கள்."

இந்தக் கேள்விக்கும் மேரி பெத் ரிங்கர் நல்ல பதிலடி கொடுத்தார்: "மாணவர்களே இங்கே பாருங்கள்! 1965ம் ஆண்டில் வாறன் ஹாடிங் இடைநிலைப்பள்ளியில் நான் வெறும் 13 வயது நிரம்பிய பெண்பிள்ளை. நான் ஒரு சிறு பிள்ளை. பேச்சு என்ற அதிகாரம் ஒன்று மட்டுமே என்னிடம் இருந்தது. அந்த அதிகாரத்தை நீங்கள் என்னிடமிருந்து பறித்தால், அதனால்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்



# கனடாவில் மீண்டும் சிறுபான்மை ஆட்சி: புதிய பிரதமராக மார்க் கார்னி

குயின்ரஸ் துரைசிங்கம்
கனடா

கனடா நாட்டிற்கான 45வது பொதுத் தேர்தல், ஏப்ரல் 28ம் திகதி நடைபெற்றது. கனடிய தேர்தல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ தகவல்களின்படி, சுமார் 230,000 பேர் தேர்தல் பணிக்காக ஊதிய அடிப்படையில் வேலைக்கு அமர்த்தப்பட்டதுடன், 343 தேர்தல் மாவட்டங்களையும் உள்ளடக்கி மொத்தம் 492 தேர்தல் பணி அலுவலகங்கள் இயங்கியுள்ளன. 7,200 முன்கூட்டிய வாக்குச் சாவடிகளும், 65,000 தேர்தல் நாள் வாக்குச் சாவடிகளும் செயற்பட்டன.



இந்தத் தேர்தலில் 16 பதிவுசெய்யப்பட்ட கட்சிகள் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டன. 1,959 உறுதிப்படுத்தப்பட்ட வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட்டனர். தேர்தல் திணைக்களத்தின் முதற்கட்ட மதிப்பீடுகள் 19.58 மில்லியன் கனடியர்கள் வாக்களித்ததாகக் குறிப்பிடுகின்றன, அதாவது சுமார் 68.65 வீத வாக்குப்பதிவு இடம்பெற்றுள்ளது.

ஏப்ரல் 18 முதல் ஏப்ரல் 21 வரையிலான முன்கூட்டிய வாக்கெடுப்புகளில் 7.3 மில்லியன் வாக்காளர்கள் வாக்களித்தனர். 928,311 பேர் தங்கள் தேர்தல் மாவட்டத்திற்குள் இருந்து சிறப்பு வாக்குச்சீட்டு மூலம் வாக்களித்தனர். பணியிலுள்ள இராணுவ வீரர்கள், சிறையிலுள்ள கைதிகள் உட்பட மொத்தம் 215,057 பேர் தங்கள் தேர்தல் மாவட்டத்திற்கு வெளியே இருந்து சிறப்பு வாக்குச்சீட்டு மூலம் வாக்களித்தனர். கனடாவிற்கு வெளியே வசிக்கும் 57,440 வாக்காளர்கள் சிறப்பு வாக்குச்சீட்டு மூலம் வாக்களித்தனர்.

வெற்றிபெற்ற ஆசனங்கள் அடிப்படையில் முதல் ஐந்து கட்சிகளாக, லிபரல் கட்சி, கன்சவ்வேட்டிவ் கட்சி, புளொக் குபெக்குவா கட்சி, புதிய ஜனநாயகக் கட்சி, பசுமைக் கட்சி ஆகியன உள்ளன.

மொத்தம் 343 தேர்தல் மாவட்டங்கள் என்ற வகையில், 50 வீதத்திற்கும் அதிகமான ஆசனங்களை வென்றால், அதாவது 172 ஆசனங்களைப் பெற்றால், ஒரு கட்சி பெரும்பான்மைப் பலத்தைப் பெறும். எந்தக் கட்சியும் இந்த இலக்கை எட்டாத நிலையில், அதிக ஆசனங்களைப் பெற்ற லிபரல் கட்சி, சிறுபான்மை அரசை அமைத்து, அதன் தலைவரான மார்க் கார்னி, கனடாவின் புதிய பிரதமராகப் பதவியேற்கிறார்.

ஒரு சில தேர்தல் மாவட்டங்களில், மிகக் குறுகிய வாக்கு எண்ணிக்கையில் வெற்றி அறிவிக்கப்பட்டுள்ளதால், அவற்றில் நீதிமன்ற தலையீடு கோரப்படலாம் என்ற பேச்சுக்களும் உண்டு. எனினும் இதுவரை நீதிமன்ற தலையீட்டை எந்த வேட்பாளரும் கோரவில்லை. நியூபவுண்லாந்து மாகாணத்தின் ரெறா நோவா என்ற தேர்தல் மாவட்டத்தில் வெறும் 12 வாக்கு களால் லிபரல் வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளார். கியூபெக்கின் ரெறாபோன் மாவட்டத் தில் 36 வாக்குகளால் லிபரல் வேட்பாளர் வெற்றி பெற்றார். நுணாவிற் தொகுதியொன்றில் 77 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி கிடைத்துள்ளது. ஒன்ராரியோவில், மில்ரன் கிழக்கிலும் வின்ட்சர் ரேக்கும்சேயிலும் 200க்கும் சற்று அதிகமான வாக்குகள் வித்தியாசத்திலேயே வெற்றி உறுதிசெய்யப்பட்டுள்ளது. தேர்தல் நடைபெற்று நான்கு நாட்களுக்குள் வழக்குப் பதியப்பட வேண்டுமென்பதால் இதற்கான வாய்ப்பு இருக்காதென நம்பலாம்.

169 என்ற மிகப்பலமான ஆசனங்களுடன் லிபரல் கட்சி தனது சிறுபான்மை ஆட்சியை ஆரம்பிக்கும் நிலையில், 144 என்ற பலமான எதிர்க்கட்சியாக கன்சவ்வேட்டிவ் கட்சி காணப்படுகிறது. புளொக் குபெக்குவா என்ற கியூபெக் பிரெஞ்சு மாகாணத்தை மட்டும் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சியும், என்.டி.பி. என்ற புதிய ஜனநாயகக் கட்சியும் வழமைக்கு மாறாக பாரிய ஆசன இழப்பைச் சந்தித்து படுதோல்வி கண்ட நிலையில், இவர்களது அதிகமான ஆசனங்கள் லிபரல் கட்சியிடம் சென்றுள்ளன. புதிய ஜனநாயகக் கட்சி, 7 ஆசனங்களை மட்டுமே பெற்றதால், கட்சி அந்தஸ்தைத் தக்க வைப்பதற்குத் தேவையான 12 ஆசனங்கள் இல்லாததால், கட்சி அந்தஸ்தை இழந்துள்ளது. தனது தொகுதியில் தோல்வியடைந்த இக்கட்சியின் தலைவர் ஜக்மீத் சிங், பதவி விலகுவதாக அறிவித்துள்ளார்.

பலமான எதிர்க்கட்சியாக வந்துள்ள கன்சவ்வேட்டிவ் கட்சியின் தலைவர் பியர் பொலிவியர், தனது தொகுதியில் தோற்றுள்ளார். தனது தலைமையைத் தொடரவுள்ளதாக அறிவித்துள்ள போதிலும், அவர் பதவி விலகவேண்டுமென்ற கோரிக்கைகளும் எழுந்துள்ளன. முன்பைவிட பலமான வெற்றியைப் பதிவுசெய்துள்ளதால், அவர் கட்சியில் தலைமையைத் தொடர வேண்டுமென்ற கருத்தும் கட்சி மட்டத்தில் பலமாக உள்ளது.

சிறுபான்மை ஆட்சி என்பதால், பெரும்பான்மையை உறுதிசெய்வதற்கான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் வரும்போது, புளொக் குபெக்குவா அல்லது புதிய ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் சிலரின் ஆதரவையாவது பெற வேண்டிய நிர்ப்பந்தத்தில் லிபரல் கட்சி ஆட்சியமைக்கிறது. இந்த இரண்டின் ஒரு கட்சியுடன் பேரம்பேசும் நிலை என்பது, மிகப் பெரிய சவாலாக இருக்காதெனினும், இத்தகைய பேரம்பேசுதலில் அக்கட்சி முன்வைக்கின்ற கோரிக்கைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இயைந்து போகின்ற தேவை என்பது, ஏற்கனவே பொருளாதாரச் சிக்கலில் தவிக்கும் கனடிய திறைசேரிக்கும் வரிப் பணத்திற்கும் மேலதிக அழுத்தங்களை அதிகரிக்கும்.



மூன்று மாதங்களுக்கு முன்னர்வரை, கருத்துக் கணிப்பில் கன்சவ்வேட்டிவ் கட்சி முன்னிலை வகித்தது. மிகப் பின்தங்கிய நிலையில் மூன்றாம் நிலைக்குச் செல்லலாம் என்று கருத்துக் கணிப்பில் காணப்பட்டது லிபரல் கட்சி. இக்கட்சியின் தலைவராக இருந்த ஜஸ்ரின் ரூடோ அவசியம் பதவி விலக வேண்டுமென்ற கோரிக்கை கட்சிக்குள்ளும் வெளியிலும் மிக உச்சமாகக் கிளம்பிய போதிலும், தனது தலைமையைத் தொடரப்போவதாக ஜஸ்ரின் ரூடோ பிடிவாதமாக இருந்தார். இருப்பினும் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக வெற்றிபெற்ற டொனால்ட் ரம்ப் கொடுத்த அழுத்தங்களும் ஏளனப் பேச்சுக்களும் கனடிய மக்களைக் கோபப்படுத்தியது. கனடாவை

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

**பெருந்தோட்ட... தொடர்ச்சி ...**

ளில் அந்த தொகை வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது.

### தேசிய மக்கள் சக்தியின் வாக்குறுதி

கடந்த பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதி தேர்தல் காலப்பகுதியில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு *2500* ரூபாய் வேதனம் பெற்றுக் கொடுக்கப்படும் என வாக்குறுதி வழங்கிய தேசிய மக்கள் சக்தி தற்போது அதனை மாற்றியுள்ளது. ‘மலையக தமிழர்களும் இந்நாட்டு மக்களே, நாட்டின் பொருளாதாரத்துக்காக பரம்பரை பரம்பரையாக பங்களிப்பு செய்துள்ளனர். நாட்டின் பொருளாதாரத்துக்காக உயிரை உரமாக்கியுள்ளனர். இங்கு பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, இறக்கும் அம்மக்களுக்கு உரிமைகள் இல்லை என்று கூறும் உரிமை எவருக்கும் இல்லை. இந்த நாட்டுக்கு உழைத்து இந்த மண்ணுக்காக உரமாகும் மலையக மக்களின் வாழ்க்கை லயன் வீடுகளில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் கட்டி வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சுதந்திரமாக இயங்கும் சூழலை நாம் உருவாக்குவோம். கம்பனிகளுடன் பேசி *1700* ரூபாய் வேதனம் கிடைக்க வழி செய்வோம்’ என்று உள்ளூராட்சிமன்ற தேர்தலை முன்னிட்டு அண்மையில் தலவாக்கலையில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கூறியுள்ளார். கடந்த காலங்களில் *2500* ரூபாய் பற்றி பேசிய தரப்பினர் தற்போது ‘பேச்சுவார்த்தையின் மூலம்’ *1700* ரூபாய் பெற்று தருவோம் என கூறுவதாக எதிர்க்கட்சிகள் சாடுகின்றன.

அத்துடன் கடந்த கால தேர்தல் மேடைகளில் பெருந்தோட்ட மக்களுக்கான காணி உரிமை, வீடமைப்பு திட்டம் தொடர்பில் கருத்துரைத்த தேசிய மக்கள் சக்தி தற்போது அவை தொடர்பில் கருத்துரைப்பதில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

### ஏனைய கட்சிகளின் வாக்குறுதிகள்

கடந்த காலங்களில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதனம் தொடர்பில் கருத்துரைத்திருந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தற்போது வெளிவாரி முறைமை தொடர்பில் கருத்துரைக்கிறது. கடந்த காலங்களில் *1000, 1700* ரூபாய் வேதனத்தை பெறுவதற்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பல மேடைகளிலும் பல பேச்சுவார்த்தைகளிலும் குரல் கொடுத்திருந்தது. எனினும் தற்போது இடம்பெறவுள்ள உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான பிரசார மேடைகளில் கருத்துரைத்துக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான், நாட்கூலி முறைமை நீக்கப்பட்டு நிரந்தர தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என வாக்குறுதி வழங்குகிறார். அதற்காக முன்னின்று செயற்படுவதாகவும் கூறுகிறார். அத்துடன் பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமை வழங்குவதன் ஊடாகவே நிரந்தர தீர்வை எட்ட முடியும் என்றும் அவர் குறிப்பிடுகின்றார். மறுபுறம் மற்றுமொரு மலையக அரசியல் கட்சியான தமிழ் முற்போக்கு கூட்டணி பெருந்தோட்ட தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்க வேண்டும் என வலியுறுத்தி வருகிறது. தேயிலை காணிகளை தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளித்து அவற்றில் பறிக்கப்படும் தேயிலை கொழுந்தை தோட்ட நிறுவனங்கள் கொள்வனவு செய்ய வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி வலியுறுத்துகிறது. எவ்வாறாயினும் இதற்கான திட்டத்தை தமிழ் முற்போக்கு கூட்டணி வெளியிடவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டும் உள்ளது. அதேநேரம், சில மலையக அரசியல் கட்சிகள் பெருந்தோட்ட மக்களின் வாக்குகளை மாத்திரம் இலக்காக கொண்டு சில வாக்குறுதிகளை வழங்குகின்றன என்ற குற்றச்சாட்டு எழுகின்றன. பல இடங்களில் ‘அபிவிருத்தி’ தொடர்ச்சியான வாக்குறுதியாக உள்ளது. சில இடங்களில் சுகாதாரம், போக்குவரத்து, கல்வி உள்ளிட்ட விடயங் கள் தொடர்பிலும் வாக்குறுதிகள் முன்வைக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் தேர்தலின் பின்னர் உள்ளூராட்சிமன்றங்கள் தோட்ட நிர்வாகங்களை கடந்து பெருந்தோட்ட மக்களுக்கு இவ்வாறான அபிவிருத்திகள் மற்றும் வாக்குறுதிகளை அமுல்படுத்துமா? என்ற ஐயம் நிலவுகிறது. கடந்த காலங்களில் அபிவிருத்தி பணிகளை முன்னெடுப்பதற்கு தோட்ட நிறுவனங்கள் இடமளிப்பதில்லை என்ற குற்றச்சாட்டை உள்ளூராட்சிமன்றங்களின் பிரதானிகள் வைத்தனர். எவ்வாறாயினும் பெருந் தோட்ட நிறுவனங்கள் இதற்கு மாறுபட்ட கருத்துக்களையே முன்வைத்தன.

• • •

**இரண்டாவது ... தொடர்ச்சி ...**

கடந்த வருடமும் ஏமன் மீது தாக்குதல் நடத்திவிட்டு திரும்பிய எப்-*18* விமானத்தை தமது கப்பல்களில் இருந்த விமான எதிர்ப்பு ஏவுகணை தவறுதலாக சுட்டு வீழ்த்தியதாக அமெரிக்கா தெரிவித்திருந்தது. தற்போது அது இரண்டாவது விமானத்தையும் இழந்துள்ளது.

இதனிடையே அமெரிக்க படையினருக்கு உதவுவதற்காக பிரித்தானியாவின் விமானந்தாங்கிக்கப்பலும் செங்கடல் பகுதி நோக்கி செல்வதாக பிரித்தானியாவின் பாதுகாப்பு அமைச்சகம் கடந்த புதன்கிழமை*(30)* தெரிவித்துள்ளது. அதேசமயம் அந்த பிராந்தியத்தில் உள்ள பிரித்தானியாவின் தளத்தில் உள்ள ரைபூன் தாக்குதல் விமானங்கள் அமெரிக்க வான்படையினருடன் இணைந்து கடந்த செவ்வாய்க்கிழமை*(29)* குதீஸ் அமைப்பின் தளங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக பிரித்தானியா தெரிவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை*(28)* அமெரிக்கா மேற்கொண்ட தாக்குதலில் தடுப்புக்காவல் முகாமில் இருந்த *68* பேர் கொல்லப்பட்டதாகவும் *49* பேர் காயமடைந்ததாகவும் குதீஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

**தமிழ் கட்சி ... தொடர்ச்சி ...**

இதை விட வடக்கில் தென்னிலங்கை கட்சிகளின் நலன்களை நிலைநாட்ட எம்மில் சிலர் அக்கட்சிகளின் சார்பில் போட்டியிட்டு எமது இருப்பை இல்லாதொழிக்க முயல்வது வெட்கக் கேடான விடயமாகும்.

எமது மக்களுக்காக இதுவரை ஏதோ ஒரு வழியில் உழைத்த எமது தமிழ் தேசியப் பரப்பில் இருக்கின்ற கட்சிகளுக்கு வாக்களித்து, அவர்களின் கரங்களுக்கு கொடுப்பது அவசியம் என மேலும் தெரிவித்தனர்.

***G.S.P*+ சலுகை .. . தொடர்ச்சி ...**

டும் வரையில் தற்போதுள்ள பயங்கரவாத தடை சட்டத்தை பயன் படுத்தாது இருத்தல் வேண்டும்.

கருத்துச் சுதந்திரம் பாதுகாக் கப்படுதல், மாகாணசபைத் தேர்தலை நடத்துதல் உள்ளிட்ட நிபந்தனைகளை அரசாங்கம் நிறைவேற்ற வழி செய்ய வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் நிசாம் காரியப்பர் கோரிக்கை விடுத்துள்ளார்.






### கனடாவில் மீண்.. . தொடர்ச்சி ...

அமெரிக்காவின் 51வது மாநிலமாக மாற்றப் போவதாகக் கூறி, அதன் கவர்னராக ஜஸ்ரின் ரூடோ இருப்பாரென அழைத்தது, கனடிய மக்களை மட்டுமன்றி, அக்கட்சிக்குள்ளும் எதிர்ப்பை அதிகரித்தது.

ஜஸ்ரின் ரூடோவால் அமைச்சராக நியமிக்கப்பட்டு, நிதியமைச்சராகவும் துணைப் பிரதமராகவும் பதவியுயர்வு பெற்ற கிறிஸ்ரியா பிறீலான்ட்டை நீக்கிவிட்டு, மார்க் கார்னியை நிதியமைச்சராக உள்ளே கொண்டுவரவுள்ளதாக ஜஸ்ரின் ரூடோ விடுத்த வேண்டுகோள், கிறிஸ்ரியா பிறீலான்டைக் கோப்படுத்த, அவர் தனது அமைச்சுப் பதவிகளை ராஜினாமா செய்வதாக அறிவித்தார். இதற்குப் பின்னரும் மேலதிக அழுத்தம் வழங்கப்பட்டதால், ஜஸ்ரின் ரூடோ பதவி விலகுவதாக அறிவித்தார். கட்சியின் தலைமைக்கு நடந்த தேர்தலில் மார்க் கார்னி வெற்றி பெற்றார். வெற்றி பெற்றதும், புதிய தேர்தலுக்கும் அழைப்பு விடுத்தார்.

கனடாவின் புதிய பிரதமராகப் பொறுப்பேற்றுள்ள மார்க் கார்னி, ஒரு சில நாட்களில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ரம்பைச் சந்திக்கவுள்ள நிலையில், கனடா மீது விதிக்கப்படுகின்ற பாரிய வரி, கனடா-அமெரிக்கா உறவு, எல்லைப் பாதுகாப்பு போன்றவை உட்பட, பல விடயங்களில் எத்தகைய அடுத்தகட்ட நகர்வுகள் அமையும் என்ற எதிர்பார்ப்புகள் அதிகரித்துள்ளன. காலம் பதில் சொல்லும்.

• • •

### பேச்சுச் சுத ... தொடர்ச்சி ...

பாதிக்கப்படப்போவது சமூகத்தின் அடிமட்டத்தில் உள்ளவர்களே. அப்படி நடந்தால் மிகவும் குறைவான அதிகாரத்தைத் தன்னகத்தே கொண்ட மக்கள் அதனால் பாதிக்கப்படுவார்கள். அது அவர்களுக்குத் தோல்வியை ஏற்படுத்தும். ஆகவே சமூகத்தின் அடிமட்டத்தில் உள்ள மக்களுக்கு அது நிச்சயமாகத் தேவை. ஆகவே தான் அதனைக் கொண்டு தாம் சந்திக்கும் அனுபவங்களை அவர்களால் விமர்சிக்கக்கூடியதாகவிருக்கும்.

இது பிரபலமான சிக்னி வில்கின்சன் அவர்கள் வரைந்த கேலிச் சித்திரம். இந்தத் தலைப்பில் நான் எழுதிய ஒரு நூலுக்கான கேலிச் சித்திரங்களை அவர் வரைந்திருந்தார். கேலிச் சித்திரத்துக்காக அமெரிக்காவில் முதலாவதாகப் புலிற்சர் பரிசை வென்ற பெண்மணி அவர். எனது முக்கிய விவாதத்தை இந்தச் சித்திரம் பிரதிபலிக்கின்றது. அன்று மாட்டின் லூதர் கிங் *(Martin Luther King)* குடியுரிமைகள் *(Civil Rights)* தொடர்பான தனது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சொற்பொழிவை மேற்கொண்ட பொழுது, வெள்ளை இனத்து மேலாதிக்கவாதிகளுக்கு அது நோவை ஏற்படுத்தவில்லையா? ஆம். அந்தச் சொற்பொழிவு அவர்களைப் பாதித்தது. ஆனால் அதனை அடிப்படையாக வைத்து பேச்சுச் சுதந்திரத்தை நாங்கள் நிராகரிக்கமுடியாது.

ஆகவே நாங்கள் எழுதிய அந்த நூலில் பேச்சுச் சுதந்திரம் ஏன் முக்கியமானது என்பதை வலியுறுத்துவதற்காக நான்கு விவாதங்களை நாங்கள் முன்வைக்கிறோம். இந்தப் பேச்சுச் சுதந்திரம் தான் எங்கள் தலைவர்களை விமர்சிக்க எங்களை அனுமதிக்கிறது. இந்தப் பேச்சுச் சுதந்திரம் அடக்குமுறைக்கு உள்ளாகுபவர்கள் அதற்கு எதிராகக் கிளர்ந்தெழ அவர்களை அனுமதிக்கிறது. அந்தப் பேச்சுச் சுதந்திரத்தைக் கொண்டு தான் எமக்கு விரும்பிய புத்தகங்கள் மற்றும் இலக்கியங்களை நாங்கள் வாசிக்கிறோம், எமக்கு விருப்பமான திரைப்படங்களை நாங்கள் பார்க்கிறோம். இந்தப் பேச்சுச் சுதந்திரத்தை அடிப்படையாக வைத்தே பாடசாலையில் ஆசிரியர்களாக இருந்தாலென்ன மாணவர்களாக இருந்தாலென்ன தங்கள் மனதுக்குப் பட்டதை வெளியில் வெளிப்படுத்துகிறார்கள். பேச்சுச் சுதந்திரம் தொடர்பான வரலாற்றை நாங்கள் படிப்பதற்கான காரணம் என்னவென்றால் பல சந்தர்ப்பங்களில் அந்தச் சுதந்திரம் மீறப்படுகின்றது. இதன் காரணமாகத் தான் கடந்த காலத்தைப் பற்றி நாம் படிக்க வேண்டும். இந்த விடயம் எவ்வளவு கவனமாக அணுகப்பட வேண்டும் என்பதை இதிலிருந்து நாங்கள் புரிந்துகொள்ளலாம்.

**தொடரும்..**

நன்றி: *TED TALKS*

### மோதலை தவிர் ... தொடர்ச்சி ...


விமானங்கள் இந்திய வான் பரப்பினுள் ஊடுருவலாம் என்ற முன்னெச்சரிக்கைகாரணமாக இந்தியா இந்த அறிவிப்பை கடந்த புதன்கிழமை(30) வெளியிட்டுள்ளது. அதாவது இரண்டு நாட்டு வான் பரப்பும் இரு நாட்டு விமானங் களுக்கு எதிர்வரும் 23 ஆம் நாள் வரை மூடப்பட்டுள்ளது.

இந்தியாவின் வான் பரப்பின் ஊடாக மலேசியாவுக்கு செல்லும் பாகிஸ்தான் ஏயர் லைன் விமானங்கள் மட்டுமே தற்போது பறப்பில் ஈடுபடுகின்றன. ஆனால் ஐரோப்பிய நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு செல்லும் பெருமளவான விமானங்கள் பாகிஸ்தான் வான்பரப்பை பயன்படுத்தி வந்திருந்தன. எனவே பாகிஸ்தானின் தடை இந்திய விமான நிறுவனங்களுக்கு பலத்த நெருக்கடிகளை தோற்றுவித்துள்ளது.

1971 ஆம் ஆண்டு ஏற்பட்ட இந்திய-பாகிஸ்தான் போருக்கு பின்னர் காஸ்மீரின் எல்லைப் பகுதியில் இரு நாடுகளும் அடிக்கடி மோதல்களில் ஈடுபட்டு வருவதுடன், அந்த பகுதி பதற்றம் நிறைந்த பகுதியாகவும் காணப்படுகின்றது.

இதனிடையே தென்னாசியாவில் அமைதியை ஏற்படுத்த முயலுமாறும், மோதல்களை தவிர்க்குமாறும் அமெரிக்காவின் வெளி விவகார அமைச்சர் மார்க்கோ றுபியோ இந்தியா வெளி விவகார அமைச்சர் மற்றும் பாகிஸ்தான் பிரதமர் ஆகியோருடன் மேற்கொண்ட தொலை பேசி உரையாடலில் தெரிவித்துள்ளார்.




### ஆறுமாத ... தொடர்ச்சி ...

தேவையில்லை என்பதை நிரூபித்து புதிய அரசியல் யாப்பில் நாடும் எங்களுடன் வடகிழக்கு தாயகமும் எங்களுடன் என்ற கருத்தை நிரூபிக்கவே முயல்வதை காணலாம்.

எனவே தமிழ் மக்கள் உள்ளூராட்சி சபை தேர்தலில் தமிழ்த்தேசியத்தின் பலத்தை தமிழ்தேசிய கட்சிகளுக்கு மட்டும் வாக்களித்து எமது ஒற்றுமையை காட்ட வேண்டிய அவசியம் உண்டு.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

## இந்திய - பாகிஸ் ... தொடர்ச்சி ...

அமெரிக்காவுக்கு இணையாக சீனா பாதுகாப்பு தலைமையகத்தை கடந்த வருடம் அமைத்துள்ளது. அது மட்டுமல்லாது இரண்டு புதிய படைப் பிரிவுகளையும் அது உருவாக்கியுள்ளது. சைபர் தாக்குதல் படையணி மற்றும் விண்வெளி தாக்குதல் படையணி.

இதுவரையில் யாரும் சைபர் போரை பார்க்கவில்லை, நடத்தவுமில்லை. அது மிகவும் மாறுபட்டது அதற்கு மிகச்சிறந்த முகாமைத்துவம் தேவை. சீனா பாகிஸ்தானுக்கு இந்த தாக்குதலில் உதவுவதன் மூலம் தான் அதனை பரீட்சித்து பார்ப்பதுடன், அந்த போரில் தன்னை அமெரிக்காவுக்கு எதிராக தயார்படுத்திக் கொள்ளவும் முடியும்.

ஐந்தாவதாக ஆயுத விநியோகம் மிக முக்கியமானது. 2021 சீனாவில் உள்ள பாக்கிஸ்த்தான் தூதரகத்திற்கு பெருமளவான பாகிஸ்தான் படை அதிகாரிகள் அனுப்பப்பட்டதுடன், சீனாவில் இருந்து பாகிஸ்தானுக்கு தொடர்ச்சியான படைக்கல மற்றும் ஆயுத விநியோகங்களையும் அவர்கள் உறுதி செய்துவருகின்றனர்.

1999 ஆம் ஆண்டு கார்கில் போர் இடம் பெற்றபோது ஜெனரல் முஷரப் சீனாவிற்கு சென்று ஆயுதங்களை கேட்டிருந்தார். ஆனால் தற்போது நிலைமை மாறிவிட்டது. தற்போது பாகிஸ்தான் கேட்காமலே சீனா வழங்குகின்றது. 1999 ஆம் ஆண்டு இந்தியாவும் ஆயுதங்களுக்காக நாடு நாடாக அலைந்திருந்தது.

ஆனால் தற்போது இந்தியாவும் பிரான்ஸின் ரபேல் விமானங்கள், ரஸ்யாவின் எஸ்யூ-30 ரக தாக்குதல் விமானங்கள், இஸ்ரேலின் இலத்திரனியல் போர் முறை மற்றும் ரஸ்யாவின் எஸ்-400 வகை நவீன வான்பாதுகாப்பு ஏவுகணைகள் என தன்னை பலப்படுத்தியுள்ளது. ஆனால் இவை போரை வெல்ல போதுமா என்பது தான் தற்போதைய கேள்வி.

பாக்கிஸ்தானுக்கு அழிவை ஏற்படுத்தலாம், ஆனால் அதற்கு நிகராக இந்தியாவும் அழிவை சந்திக்கலாம். இந்த போர் இந்தியா முழுவதும் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். பாக்கிஸ்தானுக்கு இந்தியா உத்தியோக பூர்வமாக ஏற்றுமதி செய்யும் பொருட்கள் 445 மில்லியன் டொலர்கள் ஆனால் இலங்கை, டுபாய், சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற துறைமுகங்களின் ஊடாக ஏற்றுமதி செய்யும் பொருட்களின் அளவு 10 பில்லியன் டொலர்கள் என தெரிவித்துள்ளது இந்தியாவை தளமாகக் கொண்ட Global Trade Research Initiative (GTRI) என்ற சிந்தனைப்பள்ளி.

அது தவிர இந்தியாவிள் ஆப்கானுக்கான ஏற்றுமதியும் பாக்கிஸ்தான் ஊடாக தான் செல்கின்றது. மேலும் போர் ஆரம்பித்தால் இந்தியாவை தேடிவரும் முதலீட்டாளர்கள் தப்பியோடவே முற்படுவார்கள். 2016 ஆம் ஆண்டு, 2019 ஆம் ஆண்டு இந்தியா மேற்கொண்ட இரண்டு தாக்குதல்களின் பின்னர் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சி கண்டிருந்தது. அமெரிக்காவின் வரியை தொடர்ந்து சீனாவில் இருந்து இந்தியாவுக்கு இடம்மாறும் அப்பிள் போன்ற நிறுவனங்களின் முதலீடுகளும் கேள்விக் குறியாகும்.

எனவே நிலையில் இந்தியா தற்போது ஒரு முழு அளவிலான போருக்கு செல்வது சாத்தியமில்லை. மோடி அரசு போர் செய்வது போல பாசாங்கு பண்ணலாம். 2016 ஆம் ஆண்டு மேற்கொண்ட தாக்குதல் போலவோ அல்லது 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற பாலகோட் வான் தாக்குதல் போலவோ தாக்குவதே இந்த முறை கடினமானது. பாக்கிஸ்த்தான் படையினர் மிகவும் உசார் நிலையில் உள்ளனர், ரடார், வான்படை, கடற்படை, இராணுவம் என்பன தயார் நிலையில் உள்ளது கனரக ஆயுதங்கள் இந்திய எல்லைக்கு நகர்த்தப்படுகின்றன.

அதனையும் மீறி மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல் நடத்தினால் அது இரு தரப்புக்கும் இழப்புக்களையே ஏற்படுத்தும். பாகிஸ்தான் ஏற்கனவே பொருளாதாரத்தால் வீழ்ந்த நாடு. அது தனது அழிவைப்பற்றி கவலைப்படாது ஆனால் இந்தியாவின் நிலைமை அப்படியல்ல. சீனாவுக்கு இணையாக அது தன்னை நிலைநிறுத்த வேண்டும் என்றால் போர் அதற்கு உதவாது. மறுவளமாக இந்த போருக்கு சென்றால் இந்தியாவின் பிராந்திய வல்லாதிக்கத்தின் வீழ்ச்சியாக அது அமையும்.

சீனாவுக்கு இணையாக அது தன்னை நிலைநிறுத்த வேண்டும் என்றால் போர் அதற்கு உதவாது. மறுவளமாக இந்த போருக்கு சென்றால் இந்தியாவின் பிராந்திய வல்லாதிக்கத்தின் வீழ்ச்சியாக அது அமையும், அது உள்ளூர் அரசியல் நலன் சார்ந்தது.

ஒட்டுமொத்தமாக பார்த்தால் சமூக வலைத்தளங்களில் அதிக சத்தங்களும், இரைச்சல்களும் கேட்கும், யூரியூப் போன்றவற்றில் தேசியவாதிகள் என்ற போர்வையில் போரை தூண்டி பணம் சம்பாதிக்கும் வழிகளை வர்த்தகர்கள் தேடுவார்கள். இந்த பொய்யான செய்திகளில் மூழ்கும் மக்களும் தமக்கான அழிவை தாமே தேடுபவர்களாகவும், தமது வருங்கால சந்ததியினரை தவறாக வழி நடத்துபவர்களாகவும் மாறுவார்கள்.

• • •

## பத்து வருட ... தொடர்ச்சி ...

ஆதரவாகவே உள்ளன. பெரும்பாலான சாதாரண மக்களுக்கு எதிரான ஆயுதங்களாகவே அவை பயன் படுத்தப்படுகின்றன.

மத்திய வங்கியினால் கட்டுப்படுத்தப்படும் பணப்பரிமாற்றம் என்பது மக்களிடம் இருந்து வங்கிகள் பணம் சம்பாதிக்கும் ஒரு முறையாகும், அதில் இருந்து விடுபட்டால் மக்கள் கட்டணம் இன்றி இலகுவாக பணப் பரிமாற்றத்தில் ஈடுபடலாம் என கிறிப்போ நாணய வர்த்தகரான அவர் சி.என்.பி.சி செய்தி நிறுவனத்திற்கு மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் அவர் American Bitcoin என்ற பிற்கொயின் கனிமவள அகழ்வு நிறுவனம் ஒன்றை ஆரம்பித்திருந்தார். அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்றம்பின் குடும்பத்தினர் கிறிப்போ நாணயத்தில் தமது வர்த்தகத்தை விரிவுபடுத்தி வருகின்றனர். சுயாதீன பணப்பரிமாற்ற முறை என்பது அவர்களின் இலக்காக உள்ளது. கிறிப்போ நாணயத்தின் தலைநகராக அமெரிக்காவை மாற்றப்போவதாகவும், கிறிப்போ நாணயத்தின் அரச தலைவராக தான் இருக்கப்போவதாகவும் வெள்ளைமாளிகையில் பதவியேற்ற பின்னர் ட்றம்ப் தெரிவித்திருந்தார்.

## தமிழ்த்தேசிய ... தொடர்ச்சி ...

முன்னோக்கி செல்ல முடியும்.

சிலவேளை ஜனாதிபதி அநுரவுடன் கொழும்பில் இரகசிய உடன்பாடுகளை கண்டு வடகிழக்கில் உள்ள தமிழ்தேசிய கட்சிகள் சபைகளில் கூட்டு ஆட்சிக்கு உடன்படலாம். அவ்வாறு செய்யும் கட்சிகளுக்கு இது இறுதி அஞ்சலியாகவும் அமையலாம். எதிர்வரும் மாகாணசபை தேர்தலில் பின்னடைவை அவ்வாறான கட்சிகள் சந்திக்கும் அதனை பொறுத்திருந்து பார்ப்போம். எல்லாம் இன்னும் மூன்று தினங்களால் வெளிச்சத்துக்கு வரும். என்ன நடக்கும் என்பதை அறியலாம்.

## தேர்தல் கால... தொடர்ச்சி ...

பார்க்கின்றனர் .

"புதிய வேட்பாளர்கள் புதிய யோசனைகளுடன் வந்தால், அவர்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும்." சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகள் "இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் குறைவாக உள்ளன; இது சமூகத்தில் பெரும் பிரச்சினையாக உள்ளது."

"பெண்கள் மற்றும் சிறுபான்மையினருக்கான நலத்திட்டங்கள் அதிகரிக்கப்பட வேண்டும்." சமூக ஒற்றுமை மற்றும் சமாதானம் "மக்கள் இடையே நல்லிணக்கத்தை பேணுவதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் இவ்வாறு முக்கிய பங்கு வகிக்கின்றதை கண்டு கொள்ளலாம் என்பதுடன் மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாகவும் காணப்படுகிறது.

• • •

## 3,000 பார ... தொடர்ச்சி ...

காயமடைந்தவர்கள் மருத்துவ வசதிகள் இன்றி பட்டினிச்சாவு அபாயமும் அங்கு அதிகரித்து வருகின்றது என அது மேலும் தெரிவித்துள்ளது.

மார்ச்18ஆம் நாள் போர்நிறுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் இஸ்ரேல் ஆரம்பித்துள்ள தாக்குதல்களில் இதுவரையில் 2,308 பேர் கொல்லப்பட்டுள்ளனர், 5,973 பேர் காயமடைந்துள்ளனர்.

இதனிடையே, மே15 ஆம் நாள் ஹமாஸ் அமைப்பினருடன் தொடர்புபட்ட அமைப்புக்களை தடை செய்வதாக சுவிற்சலாந்து தெரிவித்துள்ள கருத்து தமக்கு கவலை தருவதாகவும், சுவிஸ் அரசு அதனை மறு பரிசீலனை செய்வதுடன், இஸ்ரேலின் ஆக்கிர மிப்புக்களை தடுத்து நிறுத்த வேண்டும் என ஹமாஸ் அமைப்பு வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளது.

## பாரம்பரிய ... தொடர்ச்சி ...

குற்றமிழைத்தால் தண்டனை கிடைக்கும் என்பதை அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

சட்டத்தின் முன் அனைவரும் அச்சமடைய வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாட்டினதும், நாட்டு மக்களினதும் எதிர்காலத்தை முன்னிலைப்படுத்தியதாக தேசிய மக்கள் சக்தி செயற்படுகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளியவர்கள் ஆறு மாத காலத்தில் பொருளாதார மீட்சி குறித்து கேள்வியெழுப்புகிறார்கள். 'பொருளாதார மீட்சிக்கான பொறுப்பை மறக்கவில்லை. பிற தரப்புக்கு கையளிக்க போவதுமில்லை. நிலையான பொருளாதார மீட்சிக்கான அடித்தளமிட்டுள்ளோம்' என்றும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்கமில்லாமல் நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய முடியாது. நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலில் மக்கள் தங்களை விடவும் முன்னிலையில் உள்ளார்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் அரசாங்கத்தின் மீது முழுமையான நம்பிக்கை கொண்டு முழுமையாக ஆதரவளித்துள்ளார்கள். தமிழ் மக்கள் பாரம்பரியமான அரசியல் தரப்பினரை முழுமையாக புறக்கணித்துள்ளார் கள்.

ஆகவே தமிழ் மக்களை நாங்கள் புறக்கணிக்க போவதில்லை என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

## செயல்திறன் ... தொடர்ச்சி ...

எந்த அரசியல் குழப்பமும் ஏற்பட்டிருக்காது விட்டிருந்தால் சங்கு சின்னத்தை முன் நிறுத்தி வடக்கு கிழக்கில் தமிழ் மக்களை ஒன்று திரட்டி எமது சுய நிர்ணய உரிமைக்காக போராட்டம் செய்திருப்போம். அதே நேரம் பொதுவாக் கெடுப்பென்று வரும் போது தமிழ் மக்கள் தமிழர்களின் அபிலாசைகளுக்காகத்தான் வாக்களித்திருப்பார்கள்.

**திருத்தந்தை ... தொடர்ச்சி ...**

பொருளாதார, யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ளல் அதாவது கட்டமைக்கப்பட்ட அநீதியின் விளைவையும் அதிலிருந்து மீளெழ முயலும் மக்களின் வாழ்வும், அதே நேரத்தில் மேற்குலகின் அசிரத்தையும் உள்ளடக்கும். இரண்டாவது ஆசிய மையம் மேற்குலக ஏகாதிபத்தியத்தையும் மேற்குலக பேரரசுக் கட்டமைப்பையும் கேள்விக் குட்படுத்துகின்றது. விளிம்புமையத்தை நோக்கி நகர்தலிலே ஆசிய மையம் முக்கியத்துவம் பெறுகின்றது. திருச்சபையின் மையம் விளிம்பு நிலையில் இருக்க முடியுமே தவிர, மேற்குலக மையத்திலே அல்ல என்பது அவரது திடமான நம்பிக்கை. இந்நகர்வு ஆசிய பல்வகைத் தன்மையை அங்கீகரிப்பது மட்டுமல்ல மேற்குலக இறையியல் அணுகுமுறையை அல்லது அறிவுசார் முறையியலை கேள்விக்குட்படுத்தி பூர்வீக முறையியலை, ஏற்கனவே ஆசியாவில் வெவ்வேறு நாகரிக மரபுகளுக்கூடாக வரும் முறையியலை ஊக்கப்படுத்துவதாகும். இம்முறையியல் அணுகுமுறை, விடுதலை, கிறிஸ்தவத்திலிருந்து மட்டும்தான் வரமுடியும் என்ற காலனித்துவ ஏக வழியை விடுத்து, ஆசியாவில் உள்ள பல் மதங்கள் கூறும் விடுதலை முறைமையையும் ஏற்றுக் கொள்வதாகும். இம்முறையியல் மேற்குலகு கட்டமைக்க முயலும் ஏக பேரரசுக் கட்டமைப்பைக் கட்டவிழ்க்கின்றது மட்டுமல்லாது, ஆசியாவை மேற்குலகு அடிமைப் பண்பாக கருதுகின்ற, அல்லது தனது நலன்களுக்காக மட்டுமே பயன்படுத்துகின்ற செல்நெறியை உடைக்கின்றது. இதன் மூலம் மேற்குலகின் வீழ்ச்சியையும், கீழைத்தேசத்தின் எழுச்சியையும் மறைமுகமாக சுட்டுவதாக அமையும். திருத்தந்தை பிரான்சிசின் அடிக்கடி கோடிட்டுக் காட்டப்படும் வாசகமாக இருப்பது: “யதார்த்தத்தை மையத்திலிருந்து நோக்குவதைவிட விளிம்பிலிருந்து பார்ப்பது அதிக தெளிவைத் தரும்”.

காலனித்துவத்திலிருந்து மீளெழும் நாடுகளில் காலனித்துவத்தின் எச்சங்கள் தொடர்ந்தும் காலனித்துவத்தை தக்கவைத்துக் கொண்டிருக்கும். அவ்வாறான தன்மையை Coloniality என்ற பதத்தினூடாக விளங்கிக் கொள்ள முடியும். Coloniality என்பதை காலனித்துவத் தன்மை என்று மொழிபெயர்த்தால், மேற்குலக அறிவு உருவாக்கம் மிக முக்கியம் பெறுகின்றது. மேற்குலக அறிவுக் கட்டமைப்பு அதற்கான முறையியலை கொண்டுள்ளது. அதையே அது ஏனையவற்றிலும் பார்க்க அதிக தரமுள்ளதாக கட்டமைத்து தர உயர்வாக வெளிக்காட்டுகின்றது. இம்முறையியல் ஏகாதியத்தியத்தை தக்கவைப்பதற்குரிய உத்தியாக பயன்படுத்தப்படுவதை யாரும் மறுக்க முடியாது. ஆசியாவை மையமாக நகர்த்தல், மேற்குலக அறிவுக் கட்டமைப்பு முறையியலை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. இவ்வாறான செயற்றிட்டம் மேற்குலக- கீழைத்தேச உரசல்களுக்கும், இறுக்கத்திற்கும் வழி கோலும் என்பது அறியாததல்ல.

”சீனாவின் எழுச்சியைக் கண்டு அச்சம் கொள்ளத் தேவையில்லை” என்ற திருத்தந்தையின் கூற்றும் அதைத் தொடர்ந்த கருத்துரையும், ”மேற்குலகு கீழைத்தேசம், சீனா இவையெல்லாமே அமைதிச் சகமநிலையைப் பேணுவதற்குரிய கொள்திறனையும் செயற்திறனையும் கொண்டிருக்கின்றன. நாங்கள் இதனை அடைவதற்கான உத்தியாக உரையாடலை பயன்படுத்த முடியும். கலந்துரையாடலைத் தவிர வேறு வழி கிடையாது”. அவர் சீனாவை தனது நண்பனாக கருதுவதாகவும் தொடர்ந்தும் உறவுகளையும் தொடர்புகளையும் பேண விரும்புவதாக காட்டிய அறிகுறி திருத்தந்தை பிரான்சிஸ் தூரநோக்கோடு கட்டமைக்க விரும்பிய பல்துருவ உலக ஒழுங்கிலிருந்தே அவதானிக்கப்பட வேண்டும். இவ்வாறான அவதானிப்பு மேற்குலகு, சீனாவை அணுகும் விதத்திலிருந்து - வெறுமனே பொருளாதார அரசியல் வல்லரசாக அல்லாமல் மிகப் பழமையான நாகரிகத்தைக் கொண்டிருக்கின்றதை வலுப்படுத்தி சமத்துவத்தை ஆழப்படுத்துவதை சுட்டி நிற்கின்றது. வத்திக்கான் சர்வதேச தொடர்புகள் சார்ந்தும் புவிசார் அரசியல் சார்ந்தும் செப்ரெம்பர் 22 2018 இல் (வத்திக்கானுக்கும் சீனாவுக்குமிடையில்) கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை ஒரு மைல்கல் ஆகும்.

இந்த உடன்படிக்கைக்கு எதிராக தாய்வான் போர்க்கொடி தூக்கியதும் வரலாற்றில் பதிவாகியுள்ளது. தாய்வானுக்கும் ஐக்கிய அமெரிக்காவுமிடையிலான வெளிநாட்டுக் கொள்கை தொடர்பில் இருக்கின்ற உறவுகளையும் அவதானிப்பது சிறந்தது.

ஒரு சில ஆய்வாளர்கள் Brics , Brics Plus இன் எழுச்சியையும் இதே கோணத்தில் பார்க்க விரும்புவர். மேற்கூறப்பட்டவற்றின் எழுச்சிக்கும் திருத்தந்தை பிரான்சிசுக்குமிடையேயான நேரடித் தொடர்பை ஆதாரங்களுடன் நிரூபிக்க முடியாவிட்டாலும் திருத்தந்தை பிரான்சிஸ் Brics Plus இன் எழுச்சியை மாற்று உலக ஒழுங்கிற்கான அடிப்படையாக பார்க்கும் போது மகிழ்ச்சியடைந்திருக்கலாம் என்பது சிலரது கருத்து.

திருத்தந்தை பிரான்சிசின் பயணங்களையும் அவர் கட்டமைக்க விரும்பிய பல்துருவ உலக ஒழுங்குக் கோட்பாட்டின் அடிப்படையில் அணுகுவது இலகுவாயிருக்கும்.

திருத்தந்தையின் பயணங்களை புவிசார் அரசியல் கோணத்திலிருந்து ஆய்வு செய்பவர்கள் முன்னிருந்த திருத்தந்தையர்களின் பயணங்களிற்கும் பிரான்சிசின் பயணங்களிற்குமிடையேயான இடைவெளியை அவதானிக்கத் தவறுவதில்லை. அவற்றில் ஆசியாவை நோக்கிய பயணங்கள் மிக அதிக கவனத்தை ஈர்த்துள்ளன. கடந்த வருடம் செப்ரெம்பர் மாதத்தில் 12 நாட்களாக தென்கிழக்காசியாவில் இந்தோனேசியா, பப்புவா நியூகினி, கிழக்கு தீமோர், சிங்கப்பூர் பயணங்கள் மிக அவதானிப்பு பெற்றவையாக கருதப்படுகின்றது.

## சிறிலங்காப் பயணம்

திருத்தந்தை பிரான்சிஸ் 2015 இல் சிறிலங்காவிற்கான பயணத்தை மேற்கொண்டிருந்தார். சிறிலங்காவின் ஒற்றையாட்சி சனநாயக மாதிரி, மையத்தில் அதீத அதிகாரத்தைக் குவித்து வைத்துள்ளது. கொழும்பு சிறிலங்காவின் அதிகார மையமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. போரின் பின்னரான வரலாற்றுக் காலப்பகுதியில் ஒரு சில அரசியல் தலைவர்களைத் தவிர வேறு எவருமே வடக்கிற்குப் பயணித்ததில்லை. அரச தலைவர்களின் உத்தியோகபூர்வ பயணங்களும் பார்வையிடலும் கொழும்பை மையப்படுத்தியதாக வரையறைப் படுத்தப்பட்டிருக்கும். கொழும்பைத் தாண்டினால் அது பௌத்த விகாரையை பார்வையிடுவதாக அமைந்திருக்கும். கொழும்பு மையத்திற்கும், பௌத்த விகாரைக்குமான தொடர்புகள் சிறிலங்காவின் சிங்கள-பௌத்த அடையாளத்தை வலியுறுத்தி ஆழப்படுத்தப்படுவதற்கான முயற்சிகளாகவே இந்த இணைப்புக்களையும் இணைப்புக்களிலுள்ள இடைவெளிகளையும் நோக்க வேண்டிய அவசியம் உள்ளது.

சிறிலங்காவின் அரசியல் அதிகாரம் மட்டும் கொழும்பில் மையப்படுத்தப்படவில்லை. சிங்கள கத்தோலிக்க மையமும் கொழும்பில்தான் மையப்படுத்தப்பட்டுள்ளது. சிறிலங்காவின் ஒற்றையாட்சி மீ சொல்லாடலிற்குள் சிங்கள கத்தோலிக்க திருச்சபையின் உள்வாங்கப்பட்டது என்பதற்கான வரலாற்று சான்றுகள் நிறையவே உள்ளன. ஆனால் அவை ஒரு ஆய்வு நூல் ஆக இன்னும் ஒருங்கிணைக்கப்படவில்லை. ஒரு சில உதாரணங்களாக சிங்கள கத்தோலிக்க திருச்சபையின் ஒரு நாடு ஒரு தேசம் என்கின்ற ஏற்பு. நீர்காழும்பு, சிலாபம், கரையோரங்களிலிருந்து தமிழ்ப்பாடசாலைகள் சிங்கள மயமாவதற்கு சிங்கள கத்தோலிக்க திருச்சபையின் பங்கு மிக முக்கியமானது.

2015 ற்கு முன்னர் வருகை தந்த திருத்தந்தையர்கள் கொழும்பை மட்டுமே இலக்காக கொண்டிருந்தனர். திருத்தந்தையர்களின் கொழும்பை மையப்படுத்திய உத்தியாகபூர்வ பயணங்கள், சிங்கள கத்தோலிக்கர்கள் மத்தியில் சிறிலங்காவின் ஒற்றையாட்சித் தன்மையை இன்னும் அதிகமாக வலுப்படுத்தியது எனக் கூறுவது மிகைப்படுத்தப்பட்ட கூற்றாக இருக்க முடியாது. 2015 திருத்தந்தையின் பயணம் போரின் பின்னர் தற்போதைய சிங்கள பௌத்த அரசின் அடிப்படை கருத்தியலான சிங்கள பௌத்த பெருந்தேசியவாதம் அப்போது பதவியிலிருந்தவர்களுக்கு தமிழ் இன அழிப்பின் பின்னரான அரசியல் சூழ்நிலையை சமநிலைப்படுத்துவதற்கு திருத்தந்தையின் பயணத்தை பயன்படுத்தியிருக்கலாம்./ பயன்படுத்தப்பட்டது. இதுபற்றி வடக்குகிழக்கிலிருந்தே தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் இப்பயணத்தின் ஆபத்தை வத்திக்கான பிரதிநிதியூடாக தெளிவுபடுத்தியிருந்தனர்.

தமிழ் இன அழிப்பு உச்சந்தொட்ட முள்ளிவாய்க்காலுக்கும் வருகைதர வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. முள்ளிவாய்க்காலுக்கான வருகை வரலாற்றில் இடம்பெற்றிருந்தால் அதை தமிழ் இன அழிப்பிற்கு கிடைத்த அங்கீகாரமாக இருக்கும் என்பதை அறிந்த கொழும்பு மைய கத்தோலிக்கத் திருச்சபை அப்போது அதிகாரத்திலிருந்த மகிந்த குடும்பத்துடன் இணைந்து நிச்சயமாக தடுத்திருக்க வேண்டும் என்று ஊகிப்பதைத் தவிர வேறு முன்னெண்ணம் கொள்ள முடியாது. அதே கொழும்புமைய திருச்சபைதான் மகிந்தவையும் அவரது பரிவாரங்களையும் திருத்தந்தையை சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தது என்பதை வரலாறு ஆவணப்படுத்தியுள்ளது.

அப்போதிருந்த மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்பின் நெருக்குவார அழைப்பின் பேரிலேயே மடுவிற்கான திருத்தந்தையின் பயணம் அமைந்திருந்ததை மறுக்கவியலாது. திருத்தந்தை அப்போதிருந்த அரசியல் நிலைமையை ஓரளவிற்கு அவரது பட்டறிவி லிருந்து விளங்கிக் கொண்டிருந்தாலும் முழுமையாக விளங்கிக் கொண்டாரா அல்லது அது பற்றிய தெளிவு கொடுக்கப்பட்டதா என்பது தெரியாது. ஆனாலும் புவிசார் அரசியல் சார்ந்தும், திருத்தந்தை கொண்டிருந்த விளிம்புநிலை மைய நம்பிக்கையிலும் மடுப்பயணம் முக்கியம் பெறுகின்றது. மடுப்பயணம் கொழும்புமைய அதிகாரக் குவிப்பை கேள்விக்குட்படுத்தியதோடு விளிம்புநிலை நோக்கி சிறிலங்காத்திருச்சபை நகர வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது. சிறிலங்காத் திருச்சபை இன ரீதியில் பிளவுபட்டிருப்பது வெள்ளிடைமலை.

மடுவிற்கான பயணம் ஒரு வகையில் ஈழத்தமிழ் மைய திருச்சபையின் எழுச்சிக்கான அவசியத்தை கோடிட்டு அங்கீகரித்துக் கொண்டது என்ற உண்மை வரலாற்றுப் பதிவாகியது. தமிழ்த்தேச விடுதலை நோக்கிலிருந்து ஈழத்தமிழ் திருச்சபை எழுச்சி காண வேண்டும் என்கின்ற வேணவா போரின் பின்னான அரசியல் வெளியில் இன்னும் காத்திரமாக வலியுறுத்தப்பட்டது. நீதியை விடுதலையை மையப்படுத்தி ஈழத்தமிழ்த் திருச்சபை எழுச்சி காணவேண்டும் என்கின்ற கனவோடு திருத்தந்தையின் மடுப்பயணம் நிறைவுற்றிருக்கலாம்.

• • •

# தாயகமும் வாழ்வும்







